அக்ஷயா வின் அழகிய

# நந்தினி

புத்தம் புதிய மெகா நாவல் ஸ்பெஷல்

ரூ.20/-

# நினைவென்னும் சன்னதியில்...



நாவல் நாயகி

## ஆர்.மணிமாலா

# நினைவென்னும் சன்னதியில்!

## ஆர். மணிமாலா



1

மழையை சுமந்து வந்துக் கொண்டிருந்தன மேகங்கள். அதிகாலை இருட்டுடன், மழை மேகமும் சேர்ந்து கருப்படித்தன. காற்றில் அமைதியும், சிலிர்ப்பும் கூடி... திறந்திருந்த ஜன்னல்களில் எல்லாம் உட்புகுந்தன.

மேற்கு வானில் கோலத்திற்கு வைக்கப்பட்ட புள்ளிகளாய் வெண் ணிறப் பறவைகள் ஒரே சீராய் பறந்துச் சென்ற அழகை துரதிர்ஷ்ட வசமாய் எந்த கவிஞனும் பார்க்க வில்லை.

மழைக்காலம் என்பதால் ஏசி உறக்கத்தில் இருக்க... ஜன்னலின் உடைகள் காற்றின் அசைவிற் கேற்ப நடனமாடின.

சிலிர்ப்பூட்டிய தென்றலின் சில்மிஷத்தில் லேசாய் கண்திறந்த மனோசித்ரா... உடம்பை மேலும் எஸ் போல் வளைத்து குறுக்கிக் கொண்ட போது... பூங்கொத்தை மடக்கி வைத்ததுப் போலிருந்தது.

வேகமாய் ஆடிக் கொண்டிருந்த திரைச்சீலைகளை அடக்க வேண்டும் என்று தோன்றினாலும், சோம்பல் அவளை எழவிட வில்லை.

மின்விசிறி சப்தம் போடாமல் ஓடிக் கொண்டிருந்தது. இரவு விளக்கொளியில் அதன் பொன் நிற இழைகள் தகதகத்ததை விடவும் மனோசித்ராவின் முகம் அதிகமாய் ஜொலித்தது.

மென்மையான வெந்நிற பட்டுக் கன்னமும், டார்க் ரோஸ் நிற உதடும், கணுக்கால் மேலே நைட்டி உயர்ந்திருந்ததால் வழவழ கால் களும்... அந்த கோலத்தில் பார்க்கும் எந்த ஆண்மகனும் ''ஹய் யோடா...'' என்று பெருமூச்சு விடுவான்.

தொலைதூரத்தில் லாரியோ, காரோ, பேருந்தோ, உறுமும் சப்தமும், ஹார்ன் சம்பதமும் தேய்ந்து வந்தது.

புரண்டு படுத்தவள், என்ன நினைத்தாளோ... கட்டிலை விட்டு எழுந்தாள். ஜன்னல் திரைச்சீலைகளை இழுத்து மூட முயன்றவள்... கும்மிருட்டும், இரவு விளக்கொளியில்... பென்சில் வைத்து கோடு போட்டதுப் போல் இறங்கிய ஊசி மழையும், சிலீர் காற்றும்... ரசனையைக் கிளறி விட... நன்றாகத் திறந்து வைத்தாள்.

பால்கனி கதவைத் திறந்து... மோடாவில் அமர்ந்தாள். சாரலாய் மேனியை சிலிர்க்க வைத்த மழை... அவ்வளவு ரம்மியமாய் இருந்தது. இருபத்தி மூன்று வயதில் பத்து வயது குறைந்துப் போனாள்.

பாதரசம் கலந்து பிசைந்த மழை மேகங்கள் வேகமாய் நாலா பக்கமும் உருண்டோட... பெரு மழைக்கு தயாராவதை உணர்த்தியது.

அதற்கு மேலும் அங்கிருப்பது புத்திசாலித்தனமில்லை எனப் புரிய... மனசின்றி எழுந்து உள்ளே வந்தாள்.



ஜன்னல்களை இழுத்து மூடியவள், படுக்கையில தொப்பென விழுந்தாள்.

விலையுயர்ந்த பெட், அவளை உள்வாங்கி மேலும் கீழுமாய் தாலாட்டியது. உறக்கம் மறுபடியும் அருகில் வர... முரண்டுப் பண்ணியது.

வெளியில் சட சடவென பெருமழை கொட்டத் துவங்கியது.

'தோட்டத்தில் சிரித்துக் கொண்டிருக்கும் ரோஜா மலர்கள், இந்த மழைக்கு இதழ்களை பலி கொடுத்து விடுமோ' என கவலை வந்தது.

அந்த வீட்டில்... ம்ஹூம்... மாளிகையில் சுற்றிலும் ஏக்கர் கணக்கில் விரிந்திருக்கும் தோட்டத்தில் அவளுக்கு பிடித்தது... ரோஜாத் தோட்டம் தான்!

ஏதேதோ எண்ணங்கள் கலந்து கட்டு மோத... நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

திடீரென.. காலிங்பெல் சப்தம்!

திடுக்கிட்டு எழுந்தமர்ந்தாள்.

தலை உயர்த்தி... சுவற்றில்... தேக்கினால் இழையப்பட்டு... பழம் பெருமையை இன்னமும் சொல்லிக் கொண்டிருந்த அந்த காலத்து கடிகாரத்தில்... மணி ஐந்து என்றது.

'ஐந்தாகி விட்டதா? இந்த நேரத்தில் யார்?' வியப்புடன் படியிறங்கி வந்தாள்.

சமையல்காரம்மா... பரமேஸ்வரியும்... கொண்டையை உதறி சரிப்பண்ணி போட்டுக் கொண்டே கதவை திறக்க வாசலை நோக்கிப் போய்க் கொண்டிருக்க... பாதியிலேயே நின்றுவிட்டாள் மனோசித்ரா.

கதவு திறக்க.. ஆதித்யா... கையில் சிறு பெட்டியுடன் உள்ளே வந்தான்.

ஆச்சர்யமும், சிறு மகிழ்ச்சியும் உந்த, அவனை நோக்கிச் சென்றாள்.

''வாட் எ சர்ப்ரைஸ்? நாளைக்கு வர வேண்டியவர் இன்னைக்கே வந்து நிக்கறீங்க! அதுவும் இந்த நேரத்துல? போன விஷயம் முடிஞ்சுதா ஆதி?''

''ம்ஹூம்... இன்னைக்கு ஈவ்னிங் ஃப்ளைட்ல மறுபடி டெல்லி போறேன்!''

''அதுக்கு ஏன்... இப்ப?''

''ம்... உன்னை பார்க்காம இருக்க முடியல... அதான்!'' குறும்பு தனம் கண்களில் மின்ன...உதடு மடித்து சிரித்தான்.

''ப்ச்... மீ சீரியஸ்... எவ்ளோ முக்கியமான விஷயம்! அதை விட்டுட்டு வர்றீங்கன்னா...''

''ஒரு டீ...'' என்று சமையல்காரம்மாவை பார்த்துச் சொன்னவன், உனக்கு?'' என்று அவளை பார்த்துக் கேட்டான்.

''எனக்கும்...'' என்றவள் ஹாலிலிருந்த வளைவான விசாலமான சோபாவில் ஆதித்யா அமர்ந்ததும் அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

''இப்ப சொல்லுங்க ஆதி! டெல்லி எடிஷனுக்காக காபினட் மினிஸ்டரை பார்க்கப் போயிருந்தீங்க. பார்த்துட்டீங்களா?''

''இல்லே... இன்னைக்கு காலைல பத்து மணிக்கு அப்பாய்ண்ட் மென்ட் குடுத்திருந்தாங்க. அதை நாளைக்கு காலைல மாத்திடச் சொல்லிட்டேன்.''

''அதான் ஏன்?''

சற்று நேரம் பதில் கூறாமல் அவளையே புன்னகையுடன் பார்த்து பெருமூச்சு விட்டவன்...

''உனக்காக தான்'' என்றான்.

''வாட்?''



''ஆமா மனோ! நேத்து நைட்டு சீக்கிரமா படுக்கப் போய்ட்டேன். உன்னைப் பத்தி ஒரு கெட்ட கனவு!''

''............?!''

''உனக்கு ஆக்ஸிடென்ட் ஆகி... தலையெல்லாம் ப்ளட் வழிஞ்சு... மைகாட்... தாங்க முடியல... அதான் உன்னை உடனே பார்க்கணும் போல இருந்துச்சு... பார்த்துட்டு... ஓடிடலாம்னு... கிடைச்ச ஃப்ளைட்டை பிடிச்சு வந்துட்டேன்!''

''ஸில்லி... என்ன மாமா நீங்களா இப்படி? இன்னைக்கு இருக்கிற லீடிங் மேகஸின்ஸ், டெய்லி பேப்பர்ஸ்னு... பெரிய சாம்ராஜ்யத்தை நிர்வாகம் பண்ணிக்கிட்டிருக்கிற... தி கிரேட் ஆதித்யா தனஞ்ஜெயன் பேசற பேச்சா இது? ஒரு போன் பண்ணி விசாரிச்சாக் கூட போதுமே!'' சிறு கர்வமும், கிண்டலும் போட்டி போட்டன பேச்சில்.

''ஏய்... சும்மா கிண்டல் பண்ணாதே! நான் ஒண்ணும் உனக்காக வரலே! நாளைக்கு தான் அப்பாய்ண்ட்மென்ட். அதுவரைக்கும் ஏன் டைமை வேஸ்ட் பண்ணணும்னு வந்துட்டேன். இன்னும் சொல்லப் போனா ஒரு முக்கியமான ஃபைலை விட்டுட்டுப் போயிட்டேன்.''

''அப்...படி...யா?'' சின்ன ஏமாற்றத்துடன் கேட்டாள்.

பரமேஸ்வரி.. டீ கோப்பைகளுடன் வந்தாள்.

ஆளுக்கொன்றாய் எடுத்துக் கொண்டனர்.

''நல்ல மழை!''

''ஆமாம்!''

''ஒரு பெல்லுக்கே இறங்கி வந்துட்டிருக்கே... தூங்கலியா மனோ?''

''அப்படில்லாம் இல்லே! காலிங்பெல் சத்தத்துக்கு தான்... எந்திரிச்சேன்!''

''பார்த்தா தெரியலியே... தலை, நைட்டியெல்லாம் நனைஞ்சிருக்கு. வழக்கம் போல மழைய பார்த்ததும் போய் நின்னுட்டியா?''

அவன் கண்டுபிடித்து விட... வியப்பாய் தலையாட்டினாள்.

''ம்.''

''சரி.. சரி... போய் தூங்கு.. எனக்கும் தூக்கம் வருது!''

''ஓக்கே!''

காலி கோப்பையை வைத்து விட்டு மாடிப்படியேறியவளை வாத்ஸல்யத்துடன் பார்த்தான்.

'மனோ... நான் அலறியடித்துக் கொண்டு வந்ததே... உன்னைப் பார்க்கதான்! கெட்ட கனவுன்னு சொன்னதும் நிஜம்தான்! அந்த கெட்ட கனவு எது தெரியுமா? உனக்கு கல்யாணமாகற மாதிரி. அதுவும் வேற ஒரு ஆணோட... எப்படி மனோ என்னால தாங்கிக்க முடியும்?'

## 2

பூஜைக்கான விஷயங்களை முடித்து விட்டு சமையல் கட்டுக்குள் நுழைந்த யசோதாவிற்கு ஐம்பத்தி மூன்று வயது. கனத்த சரீரத்துடன் கையில் கனமாய் இரண்டிரண்டு வளையல்கள், ஏழு பவுனில் செயின், நெற்றியில் சின்னதாய் கறுப்பு பொட்டு, முகத்தில் கனிவு என.. அந்த மாளிகையின் அத்தனை பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டிருப்பவள். தனஞ்ஜெயனின் ஒரே தங்கை. கணவரை விஷக்காய்ச்சலுக்கு பலி கொடுத்து விட்டு மகள் மனோசித்ராவுடன் மனம் வெம்பிக் கிடந்தவளை தன் வீட்டு பெண் தெய்வத்தை பறி கொடுத்து விட்டு மகனுடன் சிரமப்பட்டுக் கொண்டிருந்த தனஞ்ஜெயன் தங்கையை தன்னோடு வைத்துக் கொண்டார்.

அன்றிலிருந்து வீட்டு நிர்வாகம் முழுக்கவே யசோதா வசம்தான். ஆனாலும், பேச்சிலும் சரி, நடத்தையிலும் சரி, அந்த பணக்கார ஆணவம் சற்றும் தென்படாது. அதிர்ந்துப் பேச மாட்டாள். வீட்டு வேலையாட்களின் நலனிலும் அக்கறை எடுத்துக் கொள்ளும்



தாயுள்ளம். அதனாலேயே... அவளை அத்தனை பேருக்கும் பிடித்துப் போகும்.

''பரமு... காபி போட்டுட்டியா?'' பட்டு பார்டரிட்ட காட்டன் சேலையில் மூச்சு வாங்க நடந்து வந்தாள்.

''ஆச்சுங்கம்மா! நேத்தெல்லாம் தலைவலின்னு கஷாயம் வச்சு குடிச்சீங்க... இப்ப எப்படிங்கம்மா இருக்கு?''

''பரவாயில்லே... பெருசா ஒண்ணும் சுகமாயிடலை. ஆமா, இதென்ன நாலு கப்?''

''சின்னய்யா ஊர்லேர்ந்து வந்துட்டாரும்மா!''

''அட.. எப்ப? நான் பார்க்கலியே!''

''அஞ்சு மணிக்கு. நான்தான் கதவைத் திறந்தேன். பாப்பாக் கூட எழுந்து வந்துச்சே!''

''நாளைக்கு தானே வர்றேன்னு சொன்னான், என்ன ஆச்சு? சரி, இப்படிக் குடு!''

காபி ட்ரேயை வாங்கிக் கொண்டு அண்ணனின் அறைக்குள் நுழைந்தாள்.

தனஞ்ஜெயன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்க... ஒரு கப்பை டேபிள் மேல் வைத்து விட்டு, மாடிக்குச் சென்றாள்.

தூங்கி எழுந்து கொட்டாவியுடன் எதிர்பட்டாள் மனோசித்ரா.

''குட்மார்னிங் மம்!''

''பல்லு விளக்கிட்டியா?''

''பதிலுக்கு குட்மார்னிங் சொல்ற மேனர்ஸை எப்ப கத்துக்கப் போறே மம்! விளக்கியாச்சு... குடு!''

''எடுத்துக்க... ஆதி டெல்லிலேர்ந்து வந்துட்டானாமே.. ஏன்?''

''என்னைப் பார்க்காம இருக்க முடியலையாம்!''

''ஏய்... வாலு.. சும்மாயிரு!''

அதற்குள் ஆதித்யாவின் அறையை நெருங்கி விட, ''ஏன்... நீயே கேளு மாமாவை!'' என்றாள். கோப்பையிலிருந்த காபியை நாசூக்காய் பருகி...

''தாங்க்ஸ் அத்தை! நல்ல ஹெட்டெக்! சூடா காபி சாப்பிடணும் போல இருந்துச்சு.. வந்துட்டீங்க!''

தட்டுவதற்குள் கதவு திறக்க... கலைந்த கேசமும், தொள, தொள இரவு உடையிலும், கண்களில் தூக்கம் கலையாமல், புன்னகையுடன் கோப்பையை எடுத்துக் கொண்ட ஆதித்யா, ''உள்ளே வாங்கத்தை!'' என்றான்.

''என்னப்பா... விடிகாலையிலேயே வந்துட்டியாமே!''

''அது மட்டுமில்லே... ஈவ்னிங் ஃப்ளைட்லே மறுபடி டெல்லி போறாராம்!''

''அட.. ஏன் ஆதி?''

''அதான் சொன்னேனே... கெட்ட கனவாம். என்னைப் பத்தி! உடனே பார்க்கணும்னு எல்லாத்தையும் கேன்சல் பண்ணிட்டு வந்துட்டாராம்!''

''நிஜமாவா?'' வியப்புடன் பார்த்தாள்.

''ஐயோ.. அதெல்லாம் இல்லே... ஒரு முக்கியமான ஃபைலை விட்டுட்டுப் போய்ட்டேன். நாளைக்கு காலைல அப்பாயிண்ட்மெண்ட்!''

''சரி... சரி... கவனமா இருப்பா! அப்பாவை பார்த்துட்டியா?''

''இல்லத்தே! குளிச்சிட்டு வந்திடறேன்.''

''சரிப்பா... டிபன் ரெடியாய்டும்... சீக்கிரம் வந்துடு.''

யசோதா வெளியேறிப் போக... பின்னாலேயேச் சென்ற மனோவை அழைத்தான்.

''மனோ..''



''என்ன மாமா?''

''புதுசா ரெண்டு பேரை அட்வர்டைஸ்மெண்ட் டிபார்ட்மெண்ட்ல போட்டியே... அவங்க பர்ஃபாமென்ஸ் எப்படியிருக்கு?''

''யாரு அந்த... ராயனும், கோகுலுமா...'' என்றபடி ஏதோ பேசி கொண்டே உள்ளே வர, யசோதா சென்று விட, சட்டென அவள் கன்னத்தை பிடித்து வலிக்காமல் கிள்ளினான் ஆதித்யா.

''திமிர்.. எவ்ளோ திமிர். அத்தை எதிரே அப்படிப் பேசலாமா?''

''ஆ... வலிக்குது... விடு மாமா... ப்பா... பின்னே? எல்லா ஃபைலை யும் எடுத்து வச்சு பேக் பண்ணினது நானு! பொய் சொல்லலாமா?''

சங்கடத்துடன் சிரித்தான்.

''அதுக்காக?''

''அப்பாய்ண்ட்மெண்ட்டையே கேன்சல் பண்ற அளவுக்கு சம்தி ராங்! உண்மையைச் சொல்லிடுங்க மாமா. யாரையாவது லவ் பண்றீங்களா? அந்த சம்திங் ஸ்பெஷல் பர்ஸனுக்கு பர்த்டேவா அதுக்காக தானே வந்தீங்க?''

காற்று திசைமாறி மழை மேகம் கலைந்துப் போனதுப் போல அவளைப் பார்த்தான் ஆதி.

'பளிச்சுன்னு சொல்ல எதுவோ தடுக்குது மனோ. அந்த சம்திங் ஸ்பெஷல் உன்னைத் தவிர வேற யாராய் இருக்க முடியும்?'

''என்ன ஆதி பதிலே பேசாம அப்படிப் பாக்கறீங்க?''

''எங்க அத்தைக்கு போய் எப்படி இப்படியொரு லூஸுப் பொண்ணுன்னு...''

''வாட்? நான் லூஸா, நான் லூஸா...!?'' அவன் மேல் பாய்ந்து குதறுவதுப் போல் ஓடிவர... ஆதி சட்டென பாத்ரூமிற்குள் போய் புகுந்து தாழிட்டுக் கொண்டான்.

''பார்த்துக்கறேன்...!'' அறையை விட்டு வெளியேறிய மனோசித்ரா விற்கு மூச்சு வாங்கியது.

படியிறங்கிய படியே யசோதாவின் காதில் எல்லாமே விழ சிரித்துக் கொண்டாள்.

* * *

**ஊ**துபத்தியின் சுகந்தமான நறுமணம் ஒவ்வொரு அறையிலும் பரவியிருந்தது.

தனஞ்ஜெயனின் அறை மிக விசாலமாய் இருந்தது. தேர்ந்த நபர் மூலம் இன்டீரியர் பண்ணப்பட்டிருந்தது. அங்கிருந்த ஒவ்வொரு பொருளிலும் பணக்கார மிடுக்கு இருந்தது. சுவற்றின் நிறத்திற்கேற்ப கர்ட்டன்களும், சோபா, டீப்பாய், ஃப்ளவர் வாஸ் என கொஞ்சம் மேற்கத்திய பாணி கலந்திருந்தது.

நல்ல சிவப்பில், மழிக்கப்பட்ட சுத்தமான முகத்துடன், கம்பீரமாய், வெண்ணிற பைஜாமா குர்தாவில் சோபாவில் அமர்ந்திருந்தார்.

அவருக்கு சற்றுத் தள்ளி வீல்சேர் இருந்தது. அவருக்கு அருகில் சேர் போட்டு அமர்ந்திருந்த மனோசித்ரா, வெள்ளிக் கிண்ணத்திலிருந்த ஓட்ஸ் கஞ்சியை ஸ்பூனால் புகட்டிக் கொண்டிருந்தாள்.

''போதும் சித்ரா!''

''ஸாரி மாமா... நீங்க சாப்பிட்டு முடிக்கிற வரை எனக்கு காது கேக்காது!''

''ரொம்ப பிடிவாதம் உனக்கு...!''

அப்போது உள்ளே நுழைந்தான் ஆதித்யா.

''குட்மார்னிங் டாடி!''

''குட்மார்னிங் ஆதி! சித்ரா எல்லாமே சொன்னா... ஃபைலை விட்டுட்டுப் போய்ட்டியாமே! அதுக்கேன்பா நீ வரணும்? போன் பண்ணா... யார்கிட்டயாவது கொடுத்தனுப்பி இருக்கலாம். வீணா அலையறியே!''



'அது!' என்று நமுட்டு சிரிப்பு சிரித்தாள் மனோ.

''அந்த நேரத்துல தோணலப்பா! ஒண்ணும் பிரச்சனையில்லே. எல்லா விஷயமும் மினிஸ்டர் காதுல போட்டாச்சு. இது ஒரு ஃபார்மல் மீட்டிங்தான். எல்லாம் முடிஞ்ச மாதிரிதான்.''

''சாப்பிட்டியா?''

''இனிமேல்தான்.''

''இந்தப் பொண்ணு கஞ்சிக் குடுத்து பாடா படுத்தறாப்பா!''

''மதியம் வெரைட்டியா சமைக்கச் சொல்லவா... என்ன சாப்பிட றீங்கப்பா?''

''வேணாம்ப்பா! உடம்பு மட்டுமில்லே... மனசும் ருசிய மறந்து பல காலமாச்சு! ஏதாவது தகவல் தெரிஞ்சுதா ஆதி?''

''தகவலா? என்ன தகவல்ப்பா?''

தனஞ்ஜெயனின் கவலை அப்பிய கண்கள், பெருமூச்சுடன் சுவற்றைப் பார்க்க...

இளமை காலத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் ரம்மியமாய், அழகாய் சிரித்துக் கொண்டிருந்தாள் வைதேகி.

ஆதித்யாவைப் பெற்றவள்.

அமைதியாய் தலைகவிழ்ந்தான் ஆதி.

அறை முழுக்க மவுனம் இம்சித்தது.

மனோசித்ரா நாசூக்காய் வெளியேறினாள்.

தனஞ்ஜெயன் சாதாரண நபரில்லை. தின ஓசை நாளிதழின் அதிபர். நம்பர் ஒன் சர்க்குலேஷன். ஒவ்வொரு ஊரிலும் பதிப்புகள் இருந்தன. அது போதாதென்று, ஆன்மீகம், ஜோதிடம், புலனாய்வு, குடும்ப இதழ் என வாராந்தரிகளும், நாவல், மகளிர் இதழ், லொட்டு, லொசுக்கு என்று மானாவாரியாய் வந்து சக்கை போடு போடுகின்றன. தனஞ்ஜெயனின் அயராத உழைப்பின் வளர்ச்சி அது!

திடீரென உடல்குன்ற பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, ஆறு வருடத்திற்கு முன்பு ஆதித்யா பொறுப்பேற்று... இன்று அவரை விட செம்மையாய் நடத்திக் கொண்டிருக்கிறான்.

உயர் தர சிகிச்சையினால் கைகள் இயங்கி, பேச முடிகிறது. தடுமாறிதான் நடை வருகிறது.

## 3

எந்த கடையில் வாங்கி ஏமாந்தார்களோ தெரியவில்லை?! இருள் போர்த்தியிருந்த போர்வை சாயம் போயிருந்தது.

விடியலின் துவக்கத்தில் அன்றைய நாளின் கவுண்ட் டவுன் ஸ்டார்ட் ஆனது.

மக்களிடம் தேகநலன் பற்றிய விழிப்புணர்வு அதிகமாகவே ஏற்பட்டிருக்கிறது. அருகில் பீச் இல்லாதவர்கள்.. சின்ன சின்ன பூங்காக்களைக் கூட விட்டு வைப்பதில்லை. ஜாகிங்கும், வாக்கிங்கும் கர்ம சிரத்தையாய் நடந்தேறியது. கூடவே சின்னப் பிள்ளைகளையும் அந்த கூட்டத்தில் பார்க்கும் போது... உதடுகள் பரவசத்தில் விரிவதை தடுக்க முடியவில்லை.

மாநகராட்சி குப்பை வண்டிகள், பாதி குப்பையை ரோடில் சிந்தியபடி வேகமெடுத்தன.

ரோட்டோர டிபன் கடைகள்... மும்முரமாய் வெங்காயம் நறுக்கின.

மரத்திலிருந்த காகங்கள்... தன் ஊழியம் பார்க்க புறப்பட்டன.

யசோதா.. அன்றைய மெனுவை பரமேஸ்வரியிடம் கூறிவிட்டு, வெளியில் வந்தாள்.

ஆளுயரத்திற்கு அகன்றும் உயர்ந்தும் வளர்ந்திருந்த லாப்ரடர் வகை மூன்று நாய்கள் புல்வெளியில் உலாவிக் கொண்டிருந்தன. அவைகளை கவனித்துக் கொள்ளவென்று நியமிக்கப்பட்டிருந்த அன்பரசன்



யாரிடமோ செல்போனில் பேசிக் கொண்டிருந்தான். சற்று தூரத்தில் யசோதா வந்துக் கொண்டிருப்பது தெரிய... ''அப்புறம் பேசறேன்'' என்று கட் பண்ணி பாக்கெட்டில் செருகிக் கொண்டான்.

''அன்பு.''

''அம்மா...'' பணிவாய் நின்றான்.

''பசங்க சாப்பிட்டாங்களா?'' அவள் பசங்க என்று சொன்னது நாய்களை.

''இல்லேம்மா... வாக்கிங் முடிஞ்சதும் சாப்பிட வச்சிடறேன்ம்மா!''

''கவனம்... நாளைக்கு அவங்களுக்கு இன்ஜெக்ஷன் போடணும்!''

''ஞாபகமிருக்கும்மா!''

''ஹாஸ்பிடல் போறச்ச.. துணைக்கு நம்ம வேலாயுதத்தை கூட்டிட்டுப் போ!''

''சரிங்கம்மா!''

''வேலாயுதம் எங்கே?''

''மாந்தோப்புல இருக்காரும்மா!''

யசோதா... தோப்பை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

ஆறு ஏக்கரில் பரந்து விரிந்திருந்த இடத்தில்... முகப்பில் பெரிய மாளிகையும், பின் பக்கம் தோப்பையும் உருவாக்கி இருந்தார் தனஞ்ஜெயன். சிட்டிக்கள் கிராமத்து பசுமை!

மாளிகையை ஒட்டி ரோஜாத் தோட்டம். வகை வகையான, பார்க்க முடியாத நிறங்களில் எல்லாம்... காற்றில் தலையாட்டி சிரிக்கும் அழகு! அதன் அருகே சில நிமிடங்கள் நின்றிருந்தாலே போதும்... இரத்தக் கொதிப்பு கூட மட்டுப்பட்டு விடும்!

அடுத்து காய்கறித் தோட்டம்! மாளிகைக்கு வேண்டிய காய்கறிகள் அனைத்தும் தோட்டத்திலிருந்து தான்!

வெண்டை, கத்திரி, மிளகாய், பீன்ஸ், கொத்தவரங்காய், வெங்காயம், தக்காளி எல்லாமே விளைந்தன.

அடுத்து திராட்சை தோட்டம். சற்று உள்ளே மாந்தோப்பு. அதற்கடுத்து முந்திரி, கொய்யா, மாதுளை, சப்போட்டா, ஆரஞ்சு என... கண்ணிற்கு விருந்து படைக்கும்.

காற்றிலும், அணில் கடித்து போட்டதிலும் இறைந்துக் கிடந்த மாங்காய்களை கூடையில் அள்ளிப் போட்டுக் கொண்டிருந்த வேலாயுதத்திற்கு ஐம்பத்தைந்து வயதிருக்கும்.

இவள் வருவதை பார்த்து விட்ட வேலாயுதம் அவளை நோக்கி ஓடி வந்தான்.

''அம்மா... ஆள் மூலமா சொல்லிவிட்டிருந்தா நானே வந்திருப்பேனே! ரெண்டு நாள் முன்னாடி ஒரு சாரைப் பாம்பை கொன்னுப் போட்டேன்ம்மா!''

''யாரையாவது பாம்பு பிடிக்கிறவங்களை வரவச்சு... முழுக்கவே ஆராய்ஞ்சுடு! பிள்ளைங்க நடமாடுமில்லே!''

''சொல்லியிருக்கேன்ம்மா! நாளைக்கு வந்துடுவாங்க!''

''என்ன நிறைய காய்ங்க விழுந்துடுச்சா? வலை கட்டச் சொன்னேனே!''

''கட்டிடறேன்ம்மா!''

''இந்த காய்ங்களை வேலைக்காரங்க அத்தனை பேருக்கும் ஷேர் பண்ணி குடுத்துடு! சருகுகள் சேர விடாதே! பொன்னம்மாளை துணைக்கு வச்சுக்க. அப்பப்ப... க்ளீன் பண்ணிடு!''

''பண்ணிடறேன்ம்மா!''

''காய்களை பறிச்சு... சமையலுக்கு அனுப்பிடு.''

''சரிங்கம்மா!''

நேரம் கடக்க...



ஆதித்யா தயாராகி காரை நோக்கி வந்தான்.

மனோசித்ராவும் தன் டூ வீலர் அருகே சாவியுடன் நிற்க... பார்த்து விட்ட ஆதி... அழைத்தான்.

''மனோ...''

''சொல்லுங்க ஆதி!''

''இங்கே வா!''

வந்தாள்.

''வீட்ல ஏழு கார் இருக்கு. மூணு டிரைவர்ஸ் இருக்காங்க. நீ ஏன் டூ வீலர்ல போறே?''

''கார் ரொம்ப போர் ஆதி! டூ வீலர்ல சும்மா சள்ளுன்னு பறக்கும் போது... எதிர்காத்து முகத்துல அறையும் போது, மத்த வண்டிகளை ஓவர் டேக் பண்ணும்போது... கிடைக்கிற சந்தோஷம்.. ரூம் குள்ளே அடைஞ்சுக் கிடக்கிற மாதிரி இருக்கிற இந்த கார்ல கிடைக்க மாட்டேங்குது!''

''ம்... பத்திரிகை ஆபீஸ்ல வேலை பார்க்கிறேங்கறதை... அப்பப்ப இப்படி பேசி... நிரூபிக்கறே! உன்கிட்ட பேசணும் கார்ல ஏறு!''

''ஓக்கே...'' தோளை குலுக்கியவள்... கார் கதவைத் திறந்து முன்புறம் அமர்ந்தாள். ஆதியும் அமர்ந்து காரை செலுத்தினான்.

ஆடிக் கார் அது! மிக ஆசைப்பட்டு வாங்கியது என்பதால் அவனே ஓட்டுவான். அதில் மனோவைத் தவிர வேறு யாரும் அமர அனுமதியில்லை.

மாளிகையிலிருந்து வெளிப்பட்டு வழுக்கிக் கொண்டு சென்றது கார்.

டைட் ஜீன்ஸும், சந்தன நிறத்திலான பிராண்டட் ஷர்ட்டும், வசீகரமான அவனுக்கு பக்காவாய் பொருந்தி இருந்தது.

செல்போனில் எதையோ நோண்டிக் கொண்டிருந்தவளை... சிக்னலில் நின்ற சில கணங்களில்... பார்த்து ரசித்தான்.

லெக்கின்ஸ் அணிந்து தொள தொளவென ஒரு ஷர்ட். கொஞ்சமாய் முடியை கிளிப்பில் செருகி.. மீதியை படர விட்டதில்... தோகையை விரித்துப் போட்ட மயில் போல் இருந்தது முகம்.

கோதுமை உடைத்த நிறம். அடர்ந்த இமைகள் கொண்ட குறுகுறுப்பான கண்கள்.. அத்தனை அழகு. எடுப்பான, வளைவான, அத்தனை அம்சமும் கொண்ட அழகி அவள்.

சட்டென அவனைப் பார்த்தவள் சிரித்து கண்களால் கேட்டாள். 'என்ன?'

''ஒரு விஷயம் காதுக்கு வந்தது. நீயா சொல்வேன்னு பார்த்தேன்.''

''எதைப் பத்தி?'' செல்போனை வைத்து விட்டு சீரியஸாய் நோக்கினாள்.

''நம்ம சர்க்குலேஷன் மேனேஜர் கிரி... அஞ்சு லட்சத்தை...''

சிரித்து இடைமறித்தாள் மனோசித்ரா.

''நோ... நோ... ஆதி! அது ரூமர். உண்மையா இருந்தா.. உங்க வரைக்கும் நியூஸை கொண்டு வந்திருப்பேனே. விசாரிச்சுட்டேன். எல்லாம் மூர்த்தி பண்ற வேலை. கிரியோட சீட்டுக்கு வரணும்னு உள்ளடி வேலையெல்லாம் பண்றார்.''

''ஏன் மனோ... அட்வர்டைஸ்மென்ட் முழுக்க உன் கண்ட்ரோல்ல தானே இருக்கு. மூர்த்தியை தூக்கிட்டு வேற ஆளை போடக் கூடாதா? தெரிஞ்சும் ஏன் விட்டு வச்சிருக்கே?''

''மூர்த்தி மாதிரி ஆளுங்க... எந்த ஆபீஸ்ல இல்லே.. சொல்லுங்க. மூர்த்தி வெரி டேலண்டட். சவுத் சைடுல சிக்ஸ்ட்டி பர்ஸன்ட் ஏஜென்ட்டுங்க மூர்த்திக்கு க்ளோஸ். பத்திரிகை நடத்தறப்ப திறமைசாலிங்க மட்டுமில்ல... நமக்கு குழி தோண்ட நினைக்கறவங்களையும், நம்ம பக்கத்துலேயே வச்சுக்கிட்டு வேலை வாங்கணும்.''

''அட.. பேசறது மானோதானா?''

''.........?!''

''எவ்ளோ டேலன்டா யோசிக்கறே, பிரம்மிப்பா இருக்கு!'' முகம் முழுக்க அப்படியொரு பரவசம் ஆதிக்கு.

''பத்திரிகை துறையில இருக்கறப்ப, இந்த சாமர்த்தியம் கூட இல்லேன்னா எப்படி?'' காலரை தூக்கி விட்டுக் கொண்டு உதடை குவித்து சிரித்த போது...

இதயத்தை கிச்சு கிச்சு மூட்டினாள்.

''நம்ம புது இங்லீஷ் டெய்லி நியூஸ் பேப்பரோட ஓப்பனிங் ஸெர்மனி எப்ப?''

''நெக்ஸ்ட் மன்த் ஃபர்ஸ்ட் வீக்! அதுக்கான, எடிட்டர், சப் எடிட்டர், ரிப்போர்ட்டர் போஸ்ட்டிங்குக்கு 'ஆட்' குடுந்திருந்தோமே... எப்ப இன்டர்வியூ? எத்தனை கேன்டிடேட் வர்றாங்க?''

''எக்கச்சக்கமா குவிஞ்சு போச்சு. ஃபில்டர் பண்ணி நூறு பேர் வரை இன்டர்வியூக்கு கார்டு, மெயில், எஸ்.எம்.எஸ் எல்லாம் அனுப்பியாச்சு. கமிங் சாட்டர்டே இன்டர்வியூ!''

''அப்பாவோட பெரிய கனவு இது? ஹிண்டு, இன்டியன் எக்ஸ்பிரஸை விடவும், செமத்தியா நாம கொண்டு வரணும்!''

''வொய் நாட் ஆதி? கண்டிப்பா கொண்டு வரலாம்.''

''ஷ்யூர்!''

## 4

**சி**றுகதையை எழுதி முடித்தவள், உச்சியில் கவுதமி என்று பெயரிட்டு அண்டர்லைன் பண்ணியவள், ''ஊசியிலைக் காடுகள்'' என தலைப்பு எழுதி டேபிள் மேல் அமர்ந்திருந்த ஃபேக்ஸில் ''புஷ்பாஞ்சலி'' இதழுக்கு அனுப்பி வைத்தாள்.

கைவிரல்களை நெட்டி முறித்தவள் ஜன்னலருகேச் சென்று கர்ட்டனை விலக்கினாள்.

வியர்த்து வழிந்த கூலித் தொழிலாளியின் முதுகைப் போல், கண்ணாடி ஜன்னலில் பனித்துளிகள் நேர்க்கோடாய் கீழிறங்கின. ஒரு பக்க ஜன்னலை மட்டும் திறந்தாள். மூடுபனியின் ஜில்லிப்பு... குதித்தோடி வந்து உட்புக... மேனி சிலிர்த்தது.

சற்று தொலைவில்... யாரோ தீ வைத்ததுப் போல், மலைச்சரிவில் குப்பென புகைப்போல் மேகமூட்டம் இறங்கிக் கொண்டிருந்தது.

கொடைக்கானலுக்கு வந்து வருடக்கணக்கில் ஆகிறது. ஆனால், இயற்கையை ரசிப்பதில் சலிப்பே ஏற்படுவதில்லை. அதே மலை, அதே தென்றல், அதே குளிர், அதே பனிக்கூட்டம் தான்!

ஆனால், கண்ணாடி முன் நிற்கும்போது.. நம்மை நாமே எவ்வளவு நேரம் பார்த்துக் கொள்ள முடிகிறது? காதோர நரைகளும், உதட்டோர கோடுகளும், கண்ணோர சுருக்கமும், காலண்டரில் தேதி கிழிப்பது போல், உடலின் வசீகரம் வயதால் கிழித்தெறியப்படுகிறது.

ஆனால், இந்த இயற்கைக்கு மட்டும் வயதே ஆகாதா? அதே அழகு, அதே இளமை!

யூகலிப்டஸ் மரங்களின் வாசனையை காற்று உரசிக் கொண்டு வந்திருந்தது.

கவுதமி மூச்சை உள்ளிழுத்தபடி கைகடிகாரத்தில் டைம் பார்த்தாள்.

மாலை ஐந்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்று பள்ளி விடுமுறை! அதனால் ஒரு சிறுகதை எழுத முடிந்தது.

கவுதமி - ஐம்பதை தாண்டியவள். கொடைக்கானலில் ஒரு புகழ்பெற்ற பள்ளியின் பிரின்ஸிபால். கண்டிப்பும், அதே சமயம் கருணையும் கொண்டவள். அதே ஊரில், வேறு பள்ளியில் படிக்கும் நான்கு ஏழைப் பிள்ளைகளின் படிப்பிற்கான செலவை ஏற்றுக் கொண்டிருக்கிறாள்.



தாராளமான சம்பளமாய் இருந்தாலும் சிக்கனமாய் இருப்பாள். அவள் அறையில் டிவி கூட கிடையாது. தான் எழுதும் புஷ்பாஞ்சலி வார இதழைத் தவிர வேறு பத்திரிகையை கூட வாங்குவதில்லை. அவளுக்கு வாசிக்க நேரமில்லை என்பதும் ஒரு காரணம். பள்ளிப் பணிகளுக்கே நேரம் சரியாய் இருந்தது. தன் ஒருத்திக்கு சமைத்து, சாப்பிட்டு, எஞ்சிய நேரம் காலார மலைப்பாதையில் ஒரு வாக்கிங் போய் விட்டு... கதகதப்பிற்கு பாலில்லாத டீ சாப்பிட்டு விட்டு, நேரம் கிடைக்கும் போது கதை எழுதி.. இப்படியே ஓடிக் கொண்டிருந்த வாழ்க்கையில், இதுவரை சலிப்பே ஏற்படவில்லை என்பது தான் நிஜம்.

அவளுடைய ஒரே பொழுதுபோக்கு சாட்டிங் பண்ணுவது! அதுவும் ரெண்டு மூன்று நட்புகளுடன்!

செல்போன் அலற... கவனம் கலைத்து... நகர்ந்தாள். எடுத்தவளின் கண்கள் புன்னகைத்தன.

புஷ்பாஞ்சலி பத்திரிகையிலிருந்து!

''ஹலோ...''

''........''

''யெஸ்!''

''.........''

''நல்லது... அடுத்த இஷ்யூல வருதா? தாங்க்ஸ்.''

''........''

''பேட்டியா? நோ சான்ஸ்... வேண்டாமே!''

''..........''

''இல்லையில்ல...ஸாரி... கம்பல் பண்ணாதீங்க!''

''.......''

''அகெய்ன் ஸாரி.. போட்டோ வேண்டாம். யா... ஒக்கே...''

செல்லை அணைத்து விட்டு கிச்சனிற்குள் சென்றவள் ஐந்து நிமிடத்தில் ப்ளாக் டீயுடன் ஹாலுக்கு வந்தாள்.

அவள் அப்படித்தான்!

குறிப்பிட்ட சில இதழ்களுக்கு மட்டுமே சிறுகதைகளும், கவிதைகளும் எழுதி அனுப்புவாள். அதுவும் அவளை பாதிக்கிற விஷயங்களை மட்டுமே! இந்த ஐம்பத்தைந்து வயதில்.. அவள் எழுதி பிரசுரமானது நூற்றுக்குள் தான் அடங்கும்.

அவளின் பேட்டியையும்,போட்டோவையும் கேட்டு அவள் எழுதும் இதழ்கள் நெருக்குவதுண்டு. ஆனால், தலைகீழாய் நின்றாலும் அதற்கு மட்டும் அனுமதிப்பதே இல்லை. அதனால் கவுதமி என்றால், இளம் பெண்ணா, வயதானவளா என்று யாராலும் யூகிக்க முடியவில்லை. படிக்கும் வாசகர்கள் அவளைப் பற்றி அறிய பத்திரிகைகளில் விபரம் கேட்பதுண்டு. எங்கே? அவள் சம்மதித்தால் தானே?

பேஸ்புக்கில் நட்பு வேண்டி தன் வயது இத்யாதி விவரத்துடன் நுழைந்தபோது... மூன்றே பேர் தான் ப்ரண்ட்ஸ் ரிக்வெஸ்ட் கொடுத்தனர். காரணம் அவள் வயது.

அதில் இரு பெண்கள் ஐம்பதைக் கடந்தவர்கள். அதிசயமாய் ஒரு இளைஞன் இருபத்தி நாலு வயதில். வயதானவள் என்று அறிந்தும் நட்பு வேண்டிய தருணுக்கு தான் முதலில் சம்மதம் சொன்னாள். அவனின் பரந்த அறிவு, கலை, இலக்கியத்தில் உள்ள ஆர்வம், மனித நேயம், நாகரீகமான உரையாடல்... உண்மையிலேயே... தனிமையில் ஓடிக் கொண்டிருந்த அவள் வாழ்க்கையில் இசை மீட்டும் வீணையாய் மனதில் நிரம்பியிருந்தான்.

இதில் பெரிய ஆச்சர்யம் என்னவென்றால் 'புஷ்பாஞ்சலி' இதழில் கதைகள் எழுதும் அந்த கவுதமிதான் இந்த கவுதமி என்பதையும் அவளின் எழுத்துக்கள் மூலம் கண்டுபிடித்து விட்ட புத்திசாலித்தனம் அவளை ரொம்பவே ஈர்த்துவிட்டிருந்தது.



தருணைப் பற்றிய ஞாபகம் கிளர்ந்தெழ, கடைசி மடக்கு டீயை தொண்டைக்குள் கவிழ்த்துக் கொண்டு, தன் லேப்-டாப்பை எடுத்து வந்து வாகாய் டேபிள் மேல் வைத்துக் கொண்டாள்.

தருணிடமிருந்து மெஸேஜ் வந்திருந்தது... முதல் நாள் தேதியிட்டு.

'ஹேய்... ஐ'ம் கமிங் ஃப்ரம் சென்னை!'

'ஓ... மும்பையிலிருந்து எப்போது வந்தான்? எதற்காக சென்னையின் வருகை?'

கேள்வியை அப்படியே மெஸேஜ் அனுப்பி விட்டு காத்திருந்தாள். பதிலில்லை.

அவன் பார்த்து விட்டு பதில் தரட்டும்.

* * *

டெல்லியிலிருந்து வந்த விமானம் தரையிறங்க... ஐந்தாவது பயணியாய் வெளிப்பட்டான் சித்தார்த்.

'விஷ்வா' என்று பெயரிட்ட பலகையை தாங்கி நின்றிருந்த... அழகிய இளம் பெண்ணொருத்தி, இவனைப் பார்த்து ''வாவ்!'' என மனதிற்குள் விசிலடித்தாள்.

சம்பிரதாயங்கள் முடிந்து தன் லக்கேஜ்களுடன் ஏர்போர்ட்டுக்கு வெளியில் வந்தவனின் உடம்பு ஏனோ சிலிர்த்தது.

கறுப்பு கண்ணாடியை கழற்றி அந்த சூழ்நிலையை ரசித்தான்.

நல்ல நிறம், உயரம், இருபத்தி நாலு வயதுக்குரிய துள்ளும் இளமை, கருமையான அடர்ந்த கேசம், ஒரு கையை பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி நின்றிருந்த தோரணை, நிகோடின் படியாத சிவந்த இதழ்கள், கண்ணின் கருவிழிகளுக்கு பதிலாக, லேசான பச்சை கலந்திருந்தது.

வருவோரும், போவோரும் அவனை ரொம்ப நாள் பழகியவனைப் போல சிநேகமாய் புன்னகைத்தனர்.

கால் டாக்ஸியில் ஏறி அமர்ந்தான். குறிப்பிட்ட ஹோட்டலின் பெயரைச் சொன்னான்.

''என்ன சார்... ஏதாவது புதுப் படத்துல கமிட் ஆகி இருக்கீங்களா?'' டிரைவர் கேட்டான்.

''எதுக்கு கேக்கறீங்க?'' அழகான மிக ஸ்டைலான உச்சரிப்புடன் ஆங்கிலத்தில் கேட்டான் சித்தார்த்.

''சாருக்கு தமிழ் வராதா? இங்லீஷ் புரியும். பேச வராது சார்...''

''இட்ஸ் ஒக்கே!''

''சார் பார்க்க... ஆரம்ப காலத்து அஜீத் மாதிரி இருக்கீங்க. சினிமாவுல நடிக்க வந்திருக்கீங்களான்னு கேட்டேன்!''

வாய் விட்டு சத்தமாய் சிரித்தான்.

''நல்ல கலரா, அழகாயிருந்தா, பத்திரிகையில வேலை பார்க்கக் கூடாதா சார்?''

தமிழ் உச்சரிப்பும் அழகாய், தெளிவாய் வந்தது.

''அட, பத்திரிகையில வேலை பார்க்கறீங்களா? ஒக்கே...ஒக்கே... அதுக்கு உங்க பர்ஸனாலிட்டி கொஞ்சம் ஓவர்தான் சார்!''

அமர்க்களமான பயணத்துடன் அந்த ஹோட்டலுக்கு வந்தான்.

ஏற்கனவே புக் பண்ணியிருந்த ரூமிற்கு சென்றான். ஒரு குளியல் போட்டு விட்டு அந்த பத்திரிகை அலுவலகத்திற்கு போன் செய்தான்.

''எத்தனை மணிக்கு இன்டர்வியூ ஸ்டார்ட் ஆகுது?''

''ஷார்ப்பா நைட் தர்ட்டி!''

''தாங்க்யூ...''

அழகாய் உடையணிந்து புறப்பட்டான் சித்தார்த்.



# 5

ஐந்து மாடி கட்டிடம் அது! எப்போதோ கட்டியிருந்தாலும் ஆல்டர் பண்ணி, முழுக்கவே கண்ணாடி பதித்து பிரம்மாண்டமாய் இருந்தது. பேப்பர் வாசனை மூக்கைத் துழாவியது.

விஸ்தாரமான ரிசப்ஷன்!

சித்தார்த்... டேபிள் மீது அலறிக் கொண்டிருந்த ஏழெட்டு போன்களிடம் மல்லுக் கட்டிக் கொண்டிருந்த சல்வார் அணிந்து, கிளிப்பில் கேசத்தை அடக்கி வைத்திருந்த இளம்பெண் எதிரே நின்றான்.

அவ்வளவு பிஸியிலும் ஹாண்ட்சமாய் நின்றிருந்த அவன் மீது பார்வையை வீசியவள், அவ்வளவு எளிதில் கண்களை அவனிடமிருந்து நகர்த்த முடியாமல், ''யெஸ்'' என்றாள் பிங்க் நிற லிப்ஸ்டிக் அணிந்த உதடுகளில் சிறு புன்னகை தேக்கி.

சித்தார்த் இன்டர்வியூக்கு வரச் சொல்லி அனுப்பி இருந்த கடிதத்தை காண்பித்தான்.

''ஓ... தேர்ட் ஃப்ளோர்... ரைட்ல கட் பண்ணி செகண்ட் ரூம்...''

''தாங்க்யூ மேம்!''

''ஐ'ம் ஆர்த்தி...''

''ஒக்கே... நைஸ் நேம்.. தாங்க்யூ ஆர்த்தி!'' பற்கள் பளீரிட சிரித்தான்.

சில கணங்கள் தன்னை மறந்தவள், போன் ஒலிப்பில் சுதாரித்து, ''எனிவே, பெஸ்ட் ஆஃப் லக்!'' என்றாள்.

''தாங்க்யூ... தாங்க்யூ அகெய்ன்!''

அவன் நகர்ந்ததும் அதுவரை சில்லிட்டுக் கொண்டிருந்த ஏசி... வெப்பத்தை உமிழ்வதுப் போல் இருந்தது.

அவன் லிஃப்ட் நோக்கி செல்லும் வரை பார்த்துக் கொண்டே இருந்தாள்.

மூன்றாவது தளம்!

முழுக்கவே பளிச்சென்று கண்ணாடி போல் பளபளத்தது. அங்கு நடமாடிய ஆண்களையும், பெண்களையும் பார்க்கும் போது அது பத்திரிகை அலுவலகம் மாதிரித் தெரியவில்லை. கார்ப்பரேட் ஆபீஸ் மாதிரி இருந்தது.

இரண்டாவது ரூம் என்பது... அங்கு நிலவிய அமைதி, பயபத்திரமாய் கதவைத் திறந்து உள்ளேச் சென்ற பணியாளர்கள் என்று கல்லூரி பிரின்ஸிபல் அறையை ஞாபகப்படுத்தியது.

அங்கேயும் வரவேற்பறை கண்களை அறைந்தது. அங்கு போடப்பட்டிருந்த சோபா முழுக்க.. ஆண், பெண் என ஃபைல்களுடன் காத்திருந்தனர்.

கொஞ்சம் ஹார்ட் பீட் துரிதமாக, செருமிக் கொண்டு, தைரியத்தை வரவழைத்து, தன்னைப் பார்த்தவர்களை சிறு புன்னகையுடன் ஏறிட்டு அமர்ந்தான்.

முன்பே இன்டர்வியூ ஆரம்பித்து விட்டிருந்தது.

கிட்டத்தட்ட ஒண்ணரை மணி நேரம் கடந்த பின்பே இவனை உள்ளே அழைத்தார்கள்.

ரோலிங் சேர் கைப்பிடியில் ஒரு கையை வைத்து... விரல்களால் தாவாங்கட்டையை தாங்கிப் பிடித்தபடி அமர்ந்திருந்த ஆதித்யா, உள்ளே நுழைந்த சித்தார்த்தை கண்களால் எடை போட்டான்.

செமத்தியான கலர், நல்ல உயரம், ஸ்டைலீஷ் லுக், ஒரு மாடலைப் போன்ற கம்பீரம்!''

''குட் மார்னிங் சார்... ஐ'ம் சித்தார்த். கமிங் ஃப்ரம் டெல்லி...''

''குட்மார்னிங்... டேக் யுவர் சீட்!''




## வெள்ளைத் தழும்புகள்

எமது சிகிச்சை ஆரம்பித்த 20 மணி நேரத்தல் தழும்பின் நிறம் மாறத் தொடங்கி, தோலின் அசல் நிறத்தை அடைந்துவிடுகிறது. ஆயிரக்கணக்கானோர் பயன் அடைந்துள்ளனர். நீங்களும் நோயில் முழு விவரத்தையும் எழுதி ஒருமுறை அவசியம் பரிசித்து பார்க்கவும். மருந்தின் விலை 910/- பெற விம்புவோர் உடன் நேரில் வரவும் அல்லது அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**ஆண்மை குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரம் இலவசம் புத்தம் புதிய கண்டுபிடிப்பு**

திருமணத்திற்கு முன் அல்லது பின் ஏற்பட்ட ஆண்குறி தளர்ச்சி, நரம்பு வீரியமின்மை அல்லது வளர்ச்சியின்மை, மெலிவு, வளைவு முதலான குறைபாடுகள் இருந்தால் எமது புத்தம் புதிய கண்டுபிடிப்பில் உருவான ஆண்குறி குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரத்தின் உபயோகத்தால் எப்பேர்ப்பட்ட எவ்வயதுடையோரின் ஆண்குறி குறைபாடு நிச்சயம் நிரந்தரமாக குணமடைந்துவிடும். இந்த இயந்திரம் ஒரு மெசின் போன்றதாகும். இதை உபயோகிப்பது மிக மிக எளிதாகும். இதன் உபயோகத்தால் 100% பயன் கிட்டுவது உறுதியாகும். விளம்பரத்திற்காக இந்த இயந்திரம் இலவசம். இன்றே அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு இயந்திரம் பெற்று பயனடைவீர்!

**வைத்தியர் N. ரமேஷ் நாயுடு**

பாக்கம் கிராமம் & அஞ்சல், குடியாத்தம், வேலூர் மாவட்டம் 632 602

**செல்: 9865415652, 9994486669**

''தாங்க்யூ... சா்!''

''நேட்டிவ் எது?'' அவனும் ஆங்கிலத்திலேயே கேட்டான்.

''டெல்லி!''

''பார்த்தா... ஃபாரிண் மாதிரித் தெரியறீங்க!''

''தாங்க்யூ சா்... பட் அம்மா காஷ்மீரி. அப்பா தமிழ்நாடு. ஜர்னலிஸம் படிச்சதெல்லாம் டெல்லியிலதான். சர்ட்டிஃபிகேட்ஸ் இதுல இருக்கு!''

''இருக்கட்டும்... ஜர்னலிஸத்துல உங்களுக்கு எப்படி ஆர்வம் வந்தது?''

கேள்விகளும், தொடர்ந்த பதிலுமாய் நிமிடங்கள் கரைந்தது.

''ஒக்கே மிஸ்டர் சித்தார்த்... உங்களுக்கு பெஸ்ட் ப்ரண்ட்ஸ்னு யாரைச் சொல்வீங்க?''

''என்னுடைய பத்துவிரல்கள்.''

''வெல்.. இந்த ஜாப் கிடைக்கும்னு நம்பறீங்களா?''

''தன்னம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா கதவுகளும் திறந்திருக்கும். எனக்கு தன்னம்பிக்கை அதிகம் சா்!''

ஆதித்யா முகம் மலர்ந்தான்.

''வெரிகுட் சித்தார்த்! இங்கே வந்த கேண்டிடேட்ஸ்ல சில பேரை செலக்ட் பண்ணிட்டோம். ஆனா, இன்னும் இன்ஃபார்ம் பண்ணல. பட், யூ ஆர் செலக்டட் எடிட்டர் இன்சார்ஜ்! கங்க்ராஜுலேஷன்ஸ்!'' அவன் கையைப் பற்றிக் குலுக்கினான்.

''தாங்க்யூ... தாங்க்யூ சா்!'' முகம் மலர்ந்தான்.

''உங்ககிட்ட உள்ள தன்னம்பிக்கை எல்லாம் எழுத்துல காட்டு வீங்கன்னு நம்பறேன். உங்க இங்லீஷ் ரொம்ப ஸ்டைலா இருக்கு!''

''ஓ!'' வெட்கத்துடன் சிரித்தான் சித்தார்த்.



தன் மனதிற்கு பிடித்த வேலை கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் அன்றிரவு மெரீனா பீச்சில் மல்லாந்து படுத்து மிகப் பெரிய தட்டாய் பளபளத்த பௌர்ணமி நிலவை உள்ளம் குளிர... குளிர பார்த்துக் கொண்டேயிருந்தான்.

* * *

வீல் சேரிலேயே ஹாலுக்கு அழைத்து வரப்பட்டார் தனஞ்ஜெயன்.

டைனிங் டேபிள் முன் ஆதியும், மனோவும் சப்பாத்தியை கடாய் பன்னீரோடு சாப்பிட்டுக் கொண்டிருக்க... யசோதா... அண்ணனுக்கு கோதுமை கஞ்சியை ஊட்டி விட்டாள்.

''புதுசா ஆரம்பிக்கப் போற இங்லீஷ் பேப்பரோட வேலை எந்த அளவுல இருக்கு ஆதி? இதையெல்லாம் ஏனோதானோன்னு பண்ணிட முடியாது. ஒவ்வொரு பக்கமும், ஒவ்வொரு லைனும் புத்திசாலித்தனம் தெரியணும்.''

''புரியுதுப்பா.. நான் அதுக்காக செலக்ட் பண்ண ஆட்கள் அத்தனை பேரும் வெரி டேலண்டட்! அதுல ரொம்ப யங்கா ஒரு பையன்... சித்தார்த்துன்னு பேரு.. ரொம்ப நம்பிக்கையாத் தெரியறான். அவனுக்குள்ளே நிறைய விஷயமிருக்கு. அதனாலதான் அவனுக்கு பொறுப்பாசிரியர் போஸ்டிங் குடுத்திருக்கேன்.''

''இதுக்கு முன்னாடி எந்த பத்திரிகையில வேலை பார்த்தானாம்?''

''ஜர்னலிஸம் படிச்சிட்டு ஃப்ரஷ்ஷா நம்மக்கிட்ட தான் வந்திருக் கான்.''

''எப்படி ஆதி... எக்ஸ்பீரியன்ஸ் இல்லாம செலக்ட் பண்ணினே?''

''யாராவது ஒருத்தர் நம்பி வேலை குடுத்தா தானே எக்ஸ்பீரியன்ஸ் வரும்? விஷயமுள்ள பையன்ப்பா!''

''ஆதி மாமா... அவ்ளோ லேசுல யாரையும் புகழ்ந்துட மாட்டார். அந்த சித்தார்த் இவர்கிட்ட இவ்ளோ பாஸ் மார்க் வாங்கியிருக்கான்னா... ஹி இஸ் சம்திங் ஸ்பெஷல்'' என்றாள் மனோசித்ரா.

''இன்டர்வியூ பண்ணும்போது கூட இருன்னு சொன்னேனே. ஆபிஸ்ல கூட இல்லாம எங்கே போய்ட்ட அப்ப?''

''வால்நட் மிக்ஸி கம்பெனியை நாம விளம்பரம் போட்டதுக்கான நாலு செக் வராம பெண்டிங்ல இருந்துச்சு. சேகரை இதோ, அதோன்னு இழுத்தடிச்சுக்கிட்டு இருந்தான். அதனால நானே நேர்ல போய் செக்கை வாங்கிட்டு வந்துட்டேன். தவிர, நமக்கு இந்த இண்டர்வியூவெல்லாம் அலர்ஜி. அதனாலேயும், அதுக்கும் சேர்த்து ஜகா வாங்கிட்டேன்.''

தனஞ்ஜெயன் அவர்கள் இருவரையும் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார்.

இருவரும் சாப்பிட்டு முடித்து லானுக்குள் சின்னதாய் 'வாக்' போனார்கள்.

''யசோதா... போதும்...''

''சரிண்ணே... தண்ணிக் குடிங்க!''

குடித்தவரின் உதடை சின்ன டர்க்கி டவலால் ஒற்றி எடுத்தாள்.

''ஆதிக்கும் வயசாகுதுல்லே...''

''ஆமாண்ணே!''

''நம்ம மனோவுக்கும் இருபத்தி மூணு வயசாகுது! ரெண்டு பேரும் சேர்ந்துப் போறப்ப பொருத்தம் அப்படி அம்சமா இருக்கு.''

அண்ணன் பேசப்பேச... உற்சாகத்தில் திளைத்தாள்.

''ரெண்டு பேருக்கும் சீக்கிரம் கல்யாணம் பண்ணனும். இந்த வீட்ல ஒரு நல்ல நிகழ்ச்சி நடக்கணும். அந்த ராசியிலேயாவது வைதேகி திரும்ப வந்துட மாட்டாளா?''

நெஞ்சம் விம்மி தணிந்தது.

* * *



முதல் நாளே வேலையில் ஜாய்ன் பண்ணி விட்டிருந்தான் சித்தார்த். அன்றைக்கே புதிதாய் வெள்ளை நிற கரிஷ்மா வாங்கிவிட்டான்.

ராஜகுதிரையில் இளவரசன் போல் அலுவலகத்திற்கு வந்திறங்கினான். அத்தனை கண்களும் அவனை மொய்த்தன. அதில் ஆண்களும் அடக்கம்.

அவன் பார்க்கிங் பண்ணி விட்டு முன்னே நடக்க... ''ஹேய்... சித்து...'' என்ற இனிமையான குரலுக்கு தேகம் சிலிர்க்க... திரும்பினான்.

சிநேகாவையும், ஸ்ரீதேவியையும் கலந்த கலவையாய் அந்த மாடர்ன் மயில்... தன் ஸ்கூட்டியை பார்க் செய்து விட்டு... வேறொரு பெண்ணை கை தட்டி அழைத்தவாறே நடக்க...

இவனை அவள் பார்க்கவேயில்லை!

## 6

தன் சீட்டில் அமர்ந்த பின்பும், அந்தப் பெண்ணைப் பற்றிய நினைவே சுற்றிச் சுற்றி வந்தது.

'யாரவள்? இங்கே பணிபுரிகிறவளா? அல்லது இங்கே தன் தோழியை பார்க்க வந்தவளா? அப்படியெனில் மறுபடி வருவாளா? சித்து என்றழைக்கப்பட்டவள் கண்டிப்பாய் இங்கு பணிபுரிபவளாய் தானிருப்பாள். கழுத்தில் ஐடி கார்டு தொங்கிக் கொண்டிருந்ததே! அவள் கழுத்தில் ஐடி இருந்ததுப் போல் தெரியவில்லை.

'அடப்பாவி... இருக்கிற வேலையை எல்லாம் விட்டுவிட்டு உன் துப்பறியும் மூளையை ஒரு கணம் பார்த்த பெண்ணிற்காக செலவிடுகிறாயே! ஆதித்யா இதற்காகவா... பொறுப்பாசிரியர் வேலையை கொடுத்தார்.

'ச்சே..!' தன் தலையில் தானே தட்டிக் கொண்டான். 'நானா இது? நானா இப்படியெல்லாம் யோசிக்கிறேன்? என்னாச்சு எனக்கு? இவளை

விட அழகாய், பாலில் முக்கியெடுத்த பளபளப்புடன் என் பின்னே காதலுடன் அலைந்தவர்கள் எத்தனை பேர்? யார் பின்னேயும் என் மனசோ, கண்களோ சென்றதில்லையே! இவளை மட்டும் ஏன்?'

'ஐயோ... மனசே... அடங்கு! எனக்கு நிறைய வேலையிருக்கிறது. இன்று சபாநாயகரிடம் பேட்டி எடுக்க அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கி யிருக்கிறேன். என்னை வேலை செய்ய விடு!'

அடக்கி விட்டான்.

* * *

இப்படியே மூன்று நாட்கள் ஓடி விட...

அன்று வழக்கம் போல்... இங்லீஷ் பத்திரிகை அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்த நான்காவது தளத்திற்கு செல்வதற்காக லிஃப்ட்டில் ஏறினான்.

''எக்ஸ்க்யூஸ் மீ...'' என்றபடி ஓடி வந்து... லிஃப்ட்டுக்குள் நுழைந்து மூச்சு வாங்கியவள்...

அவளேதான்!

அந்த மாடர்ன் மயிலேதான்.

''தாங்க்யூ...'' என்று காஷுவலாய் சொல்லிக் கொண்டு அவன் பக்கம் திரும்பியவள்... சற்று நேரம் கண்களை விலக்க முடியாமல் திணறிப் போனாள்.

'யாரிவன்? மாடலிங் பண்றவனா? இந்த கெத்தும், நிறமும், அழகும்... ஆதியைப் போல் பெரிய நிர்வாகத்தை நிர்வகிப்பவன் போல் தோன்றுகிறதே!'

அவள் தன்னை சில கணங்கள் பார்த்ததே... ரஷ்யாவின் பனிப் பிரதேசத்தில் உருண்டெழுந்து சிலிர்த்த மாய ரசாயனத்தை உண்டு பண்ணிய களிப்பில், மென்மையாய் புன்னகைத்து... ''வெல்கம்'' என்றான்.



அதன் பிறகு எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

அவள் செகண்ட் ஃப்ளோரில் இறங்கிக் கொண்டாள்.

மறுநாள் அதே நேரம்... சித்தார்த் வாயிலில் காத்திருந்தான்.

அப்போது ஆதித்யாவின் ஆடிக் கார் வர... சித்தார்த் அனிச்சையாய் ரிசப்ஷனை ஒட்டியிருந்த அறைப் பக்கம் நழுவி அவன் கண்களில் விழாமல் தவிர்த்தான்.

அதே காரில் மனோசித்ரா இறங்கியதை பார்க்கவில்லை. வாசலி லேயே சேகரை பார்த்து விட்ட மனோ அவனிடம் சில இன்ஸ்ட்ரக் ஷன்களை கொடுக்க... ஆதி சைகையால் விடைபெற்று.. தன் அறை நோக்கிப் போய் விட்டான்.

அவன் சென்று விட்டதை உறுதி செய்த பின் அங்கு வந்தவன், அவள் லிஃப்ட்டுக்குள் சென்று விட, இவன் ''எக்ஸ்க்யூஸ் மீ'' என்றபடி ஓடிவர... சிறு சிலிர்ப்புடன் பார்த்தாள் மனோ.

''தாங்க்யூ...''

''மோஸ்ட் வெல்கம்'' என்று சிரித்தாள்.

''ஹாய்... ஐ'ம் சித்தார்த்!''

''சித்தார்?''

''யா... நீங்க இங்கே ஒர்க் பண்றீங்களா?''

''யெஸ்... அட்வர்டைஸ்மென்ட்ல! ஐ'ம் மனோசித்ரா!''

''வாவ்... வெரி நைஸ்!''

''எதைச் சொல்றீங்க?''

''இந்த கன்சர்ன்ல ஒர்க் பண்றது வாவ்! உங்க நேரம் வெரி நைஸ்!''

''தாங்க்ஸ் யுவர் காம்ப்ளிமென்ட்ஸ்! நியூ டெல்லில எடிட்டர் இன்சார்ஜா ஜாய்ன் பண்ணியிருக்கிற சித்தார்த் நீங்க தானா?''

''யா...''

தலைக்கு மேல் சாரல் மழை பெய்தது மனோவுக்கு.

'அவனா நீ? கவனிச்சுக்கறேன்.'

அவனைப் பார்க்கையில் இது தான், இன்னது தான் என்று பிரித்து சொல்ல முடியாதளவு ஒரு மாதிரி உணர்ச்சிக் கலவை அவளுள்!

அவனுக்குள்ளும் அதேதான்!

எத்தனையோ வருடம், காலம் காலமாய் பழகி, இடையில் பிரிந்து மறுபடி சந்திப்பது போல் ஒரு நெருக்கமான உணர்வு.

அவள் அங்கு தான் பணிபுரிகிறாள் என்று தெரிந்த பின் ஆலாய் பறக்கவில்லை. தன் வேலையில் முழு கவனமும் செலுத்தினான். தனக்கடுத்த நிலையிலுள்ள நிருபர்களை எளிதாய் தன் நட்பு வளையத்தினுள் கொண்டு வந்து தான் நினைத்தது வரும்வரை அவர்களிடமிருந்து விஷயமுள்ள எழுத்துக்களை பெற்றுக் கொண்டான்.

புத்தம் புதிய ஆங்கில தினசரியின் வெளியீட்டு விழாவை பிரம் மாண்டமாய், விஐபி-க்கள் புடை சூழ நடத்தினான் ஆதித்யா.

பேப்பர் தரமாகவும், மக்களிடம் எளிதாக ரீச் ஆகக் கூடிய வகையில் தலைப்புகளும், சம்பவ தொடுப்புகளும் விரும்பி படிக்கத் தூண்டியது. மனோ ஃபங்ஷனில் மேடையில் ஏறாமல் பார்வையாளர்கள் மத்தியில் மன் வரிசையில் அமர்ந்திருந்தாள். அதனால், அவள் ஆதியின் உறவுக்காரி என்பது சித்தார்த்துக்கு தெரியாமலேயே இருந்தது.

நாட்கள் நகர்கின்றன. தினசரிக்கு முழுக்கவே அட்மினிஸ்ட்ரேஷன் தனி என்பதால் மனோ அந்த பக்கம் போக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட வில்லை. கீழே பார்த்துக் கொள்ளும் போது ஒரு ஹலோ, ஒரு புன்னகை, மனதிற்குள் மழைச்சாரல் என போய்க் கொண்டிருந்தது.

* * *



மனோவும், ஆதித்யாவும் தனஞ்ஜெயன் முன் அமர்ந்திருந்தனர்.

அவர் முன் வீற்றிருந்த ஆங்கில தினசரியை எடுத்துப் படித்தவர், ''குட்'' என முகம் மலர்ந்தார்.

''ரொம்ப நல்லா வந்திருக்கு இந்த மேட்டர்! கண்டிப்புடனும், முதல்வரிடம் சிறு கோரிக்கையுடன் கோபத்தையும் கலந்து சமூக பிரச்சனையை எழுதியிருக்கறது... நச்சுன்னு இருக்கு!''

''அதுமட்டுமில்லேப்பா... நம்ம பேப்பர்ல வர்ற மேட்டரை சி.எம். படிச்சுட்டு உடனுக்குடனே ஆக்ஷன் எடுக்கிறாங்க...! சர்க்குலேஷனும் ஒவ்வொரு நாளும் கூடிக்கிட்டேப் போகுது.''

''அப்படியா? இந்த மேட்டரை யாரு எழுதினது?''

''எடிட்டர் இன்சார்ஜ் சித்தார்த்து தான்ப்பா!''

''அப்படியா? அந்தப் பையனை ஒரு நாள் வீட்டுக்கு வரச் சொல். பாராட்டணும். எழுத்தாளனுக்கு எவ்வளவு தான் சம்பளம் அள்ளிக் குடுத்தாலும், அவன் எழுத்துக்கு கிடைக்கிற விமர்சனம்தான் உண்மையான சம்பளமா நினைப்பான்!''

''கண்டிப்பா... அழைச்சிட்டு வர்றேன்ப்பா!''

சித்தார்த் பற்றி பேச்சு எழுந்ததால் முகம் மலர்ந்தது மனோவுக்கு.

''சரிப்பா... நேரமாச்சு... கிளம்பறோம்.''

''போய்ட்டு வாங்க!''

இருவரும் வெளியில் வந்தனர்.

மனோ அவனை முந்திச் சென்றாள்.

''மனோ...''

''என்ன மாமா?''

''இப்பல்லாம் ஏன் என் கூட கார்ல வரமாட்டேகுறே? ஒண்ணு டூ வீலர்ல போறே... இல்லேன்னா... டிரைவரைக் கூட வேணாம்னுட்டு கார் எடுத்துட்டுப் போறே? எதுக்கு?''

"ஃபர்ஸ்ட் அஃப் ஆல்... எனக்கு டூ வீலர்ல போறது தான் ரொம்ப இஷ்டம்! செகண்ட், கார் ஓட்டப் பழகிக்கறது நல்லதுதானே?"

"ம்... சரிதான்!" என்றான் அரைமனதாய்.

ஆதித்யாவிற்கு நல்ல ட்ரெஸ்ஸிங் சென்ஸ். எந்த நேரத்தில் எந்த மாதிரி உடையணிவது, எந்த மாதிரி உடல்வாகுக்கு எப்படிப்பட்ட நிறத்தில் உடை அணிவது போன்ற விஷயமெல்லாம் அத்துபடி. மனோவேக் கூட, அவன் உடை நேர்த்தியை தினசரி பாராட்டுவது வழக்கம். இப்போதும் அவன் அணிந்திருந்த உடைக்கும், படிய வாரிய தலைக்கும், ஆங்கிலப் பட கதாநாயகன் போலிருந்தான். ஆனால், அது இப்போது அவள் கவனத்தை ஈர்க்கவில்லை.

டூ வீலரில்... அட்டகாச வேகத்தில் பறந்துச் சென்றவளைப் பார்த்து மார்புக் கூடு ஏறி இறங்கியது.

* * *

அனுமதிக் கேட்டு உள்ளே நுழைந்தவளைப் பார்த்ததும் அதிர்ச்சியில் தூக்கி வாரிப் போட்டது சித்தார்த்திற்கு.

"வா.. வாங்க... வாங்க மிஸ் மனோசித்ரா."

"தாங்க்ஸ்!"

"நான் இங்கே ஜாய்ன் பண்ணி ஒரு மாசமாய்டுச்சு. ஆனா, இப்பதான் ஃபர்ஸ்ட் டைம் என் கேபினுக்கே வர்றீங்க. ஒரே கன்சர்ன்ல வேலை பார்க்கறோம்னு தான் பேரு..." என்றான் ஆங்கிலத்தில்.

"நீங்க என்னைக் கூப்பிடவே இல்லையே! எனிவே.. கங்க்ராட்ஸ்..."

"எதுக்கு?"

"உங்க ஆர்ட்டிக்கிள் எல்லாம் சூப்பராயிருக்கு. படிக்கிறப்ப.. எனக்கே எழுதணும்னு தோணுது!"

"வெரிகுட்... எழுதுங்களேன் சித்ரா. நான் ஐடியா தர்றேன். எம்.டி. எனக்கு கொஞ்சம் க்ளோஸ். உங்களை என் செக்ஷனுக்கு மாத்திடச் சொல்லட்டுமா? சொன்னால் செய்வார்!"



அவன் அப்படிச் சொன்னதும், "அட!" என ஆச்சர்யத்துடன் பார்த்தாள்.

## 7

"என்ன அப்படிப் பார்க்கறீங்க? நம்பலையா? உண்மையாதாங்க சொல்றேன். அவர் நான் சொன்னாக் கேப்பார்."

"இட்ஸ் ஓக்கே... ஏதோ எழுதுவேன்... அதுக்காக ரிஸ்க் எடுக்க விரும்பல.. அதுல இன்ட்ரஸ்ட்டும் இல்ல... பட், நான் இப்ப சொல்ல வந்ததே ஒரு பெரிய விஐபி... உங்களோட ஆர்ட்டிக்கிளை படிச்சிட்டு பாராட்டினார். உங்களை நேரில் சந்திக்கணும்னு ஆசைப்பட்டார். அவர் இங்கே வந்து பார்க்கறதை விட, நீங்க அவரை போய் பார்க்கறதுதான் மரியாதையா இருக்கும்னு நினைக்கிறேன். நீங்க என்ன நினைக்கறீங்க?"

"ஷ்யூர்.. ஷ்யூர்... பட், அவர் யாருன்னு சொல்லவே இல்லையே!"

"அது ஒரு சின்ன சஸ்பென்சா இருக்கட்டுமே ப்ளீஸ்."

அந்த சின்ன கெஞ்சலில் கரைந்துப் போனது மட்டுமின்றி.. இருவருக்கிடையே நெருக்கம் அதிமானதுப் போல் உணர்ந்தான்.

"ஓக்கே சித்ரா!"

"ஐ லைக் இட்!"

"எ... என்னது சித்ரா?"

"என்னை எல்லோரும் மனோன்னுதான் கூப்பிடுவாங்க. பட், நீங்க மட்டும்தான் சித்ரான்னு கூப்பிடறீங்க. கேட்க நல்லாருக்கு!"

"ஓ... தாங்க்ஸ்...."

"நாளைக்கு ஈவ்னிங் ரெடியாயிருங்க... அவரைப் பார்க்க போகலாம்!"

''அது... வந்து... ஆதித்யா சார் ஊர்ல இல்லே. நாக்பூர் போயிருக்கார். அவர் இல்லாத நேரத்துல பொறுப்பில்லாம கிளம்பினா... நல்லாருக்காதே! நான் எட்டு, ஒன்பது மணிவரைக்கும் ஆபீஸ்ல இருக்கணும்! நான் எப்படி?''

''ஆதி சார்கிட்டே நான் சொல்லிக்கறேன்.''

''எ... எப்படி... அவ்வளவு பழக்கமா?''

''ஓரளவு! என்னுடைய திறமையை மனந்திறந்து பாராட்டியிருக்கார். அந்த உரிமையில தான்! ரெண்டு மணி நேரம் பர்மிஷன் போட்ருங்க. பார்த்துட்டு ஆபிஸ்கே வந்துடலாம்!''

''ம்... ஓக்கே!''

அவள் வெளியேறிப் போன பின்பும், அவள் விட்டுப் போன உயர் ரக செண்டின் நறுமணம் அங்கேயே இருந்தது.

எம்பி எம்பி குதிக்க வேண்டும் போல் இருந்தது. 'இவ்வளவு நேரமும் என்னிடம் பேசிக் கொண்டிருந்தது அவள்தானா? கடவுளே.. நாளைக்கு எப்படியாவது என் பைக்கில் வர சம்மதிக்க வேண்டும். அதற்கு ஒரு வழிப்பண்ணு!'

இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. எஞ்சிய தம்மாத்துண்டு தூக்கத்திலும் கனவில் அவள்தான் வந்தாள். பைக் மேட்டிலும், பள்ளத்திலும் வேகமாய் ஏறி இறங்க... சித்ரா பயத்தில் அவன் முதுகோடு ஒட்டி அணைத்துக் கொண்டு அலறினாள்.

கனவில் வந்த பருப்பெல்லாம் மறுநாள் வேகவில்லை.

நான்கு மணிக்கே சித்ரா வந்துவிட்டாள்.

''போகலாமா?''

''இதோ... இந்த மேட்டரை டிடிபி-க்கு கொடுத்தனுப்பிடறேன்!''

''இன்னுமா இந்த வேலையெல்லாம் நீங்க பார்த்துட்டு இருக்கீங்க? சப்-எடிட்டர் எங்கே?'' அவள் கேட்ட தோரணையில் மிடுக்கு இருந்தது.



சிரித்து விட்டான்.

''என்னங்க?''

''ஆதி சார் மாதிரியேப் பேசறீங்க.''

''மேகநாதன்!'' அடுத்த கேபினை எட்டிப் பார்த்து அழைத்தாள்.

''இதோ வந்துட்டேன் மேடம்!''

பவ்யமாய் அவள் முன் வந்து நின்றான்... அந்த உதவி ஆசிரியர்.

''இனி, இந்த வேலையெல்லாம் நீங்கதான் பார்த்துக்கணும். டிடிபி-க்கு அனுப்பிடுங்க!''

''சரிங்க மேடம்!''

வாங்கிக் கொண்டு வெளியேற, சித்தார்த் வியப்பாய் அவளைப் பார்த்தான்.

''அதான் சொன்னேனே... ஆதி சார் மாதிரியே கம்பீரமாப் பேசறீங்க.. பாருங்க சப்-எடிட்டர் கூட மறுபேச்சு பேசாம சொன்னதைச் செய்யறார்.''

குபீரென்று எழுந்த சிரிப்பை... மென்று தொண்டைக்குள் இறக்கிக் கொண்டவள், ''சரி... கிளம்பலாமா?'' என்றாள்.

''ம்...''

லிஃப்டில் பயணித்து கீழிறங்கினர்.

அவன் தன் கரிஷ்மா சாவியை சுழற்றியபடி பார்க்கிங் பகுதியை நோக்கிப் போக...

''சித்தார்த்...'' என அழைத்தாள்.

''என்னங்க?''

''எங்கே போறீங்க?''

''என் பைக்கை எடுக்க...''

''பைக் வேணாம்...''

''ஏ... ஏங்க... ஆட்டோவிலேயா போறோம்? அது நல்லாயிருக்குமா?'' ஏமாற்றத்துடன் கேட்டான்.

''என் வண்டியில போய்டலாம்!''

''உங்க வண்டியிலயா? 'சின்ன' அதிர்ச்சியுடன் கேட்டான்.

அவனை அதற்குமேல் யோசிக்க விடாமல், காரை எடுத்துக் கொண்டு வந்து அவன் முன் நிறுத்தினாள்.

நம்பமுடியாமல் பார்த்தான்.

'இவள் காரில் வந்து ஒரு நாளும் பார்த்ததில்லையே!'

''கெட் இன்!''

பக்கத்தில் அமர்ந்தான்.

கேட்டை திறந்து வைத்த வாட்ச்மேன் இவளுக்கு சலாம் வைக்க... சின்ன தலையசைப்புடன் ஏற்றுக் கொண்டாள் சித்ரா. அவனோ, அந்த மரியாதை தனக்காக என்று எண்ணியபடி கையை உயர்த்தி ஏற்றுக் கொண்டான்.

சிரிப்பு வர முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

''கார் உங்களோடதா?''

''இல்லே... மாமாவோடது. எப்பவாவது அவர்கிட்டே பர்மிஷன் வாங்கிட்டு எடுத்துட்டு வருவேன்!''

''ஓ!''

''சித்தார்த்!''

''சொல்லுங்க!''

''உங்களுக்கு தமிழ் ரொம்ப கொஞ்சமா, கஷ்டப்பட்டு தான் பேசறீங்க. உங்க லுக், இங்லீஷ் பேசற ஸ்டைல் எல்லாமே ஃபாரினர் மாதிரி இருக்கு. உங்க கண்கள் கூட ஐஸ்வர்யா ராய் மாதிரி, கொஞ்சம் பச்சை கலந்து இருக்கு!''



''ரியல்லி! தாங்க்யூ சித்ரா!''

''எங்கே தங்கியிருக்கீங்க?''

''பத்து நாள் முன்னாடி வரைக்கும் ஹோட்டல்ல. இப்ப தனியா, சின்னதா ஒரு ஃப்ளாட் கிடைச்சது. வாடகைக்கு போய்ட்டேன்!''

''சமையல்?''

''செல்ஃப் குக்கிங் தான்!''

'ஓ... சமைக்கத் தெரியுமா?''

''எல்லாமே அரைவேக்காடுதான்!''

''உங்க பேரன்ட்ஸ்?''

சற்றுநேரம் மௌனித்தவன் பின் தோளை குலுக்கியபடி சொன்னான்.

''அம்மா இல்லே... அப்பா என்னோட சின்ன வயசுலேயே பிரிஞ்சு தனியாப் போய்ட்டார்!''

''..........?!''

அதற்கு மேல் அவனிடம் குடும்ப விஷயம் பற்றி கேட்பது நாகரிகமல்ல என்றுணர்ந்தவள் அமைதியானாள்.

பின் அவளே பேச்சை திசைமாற்ற... ''அதெப்படி சித்தார்த் எதைப் பத்தியும், யாரைப் பத்தியும் கவலைப்படாம, யாருமே எழுதத் தயங்கிற விஷயங்களை அரசுக்கு எதிரா எழுதறீங்க? தமிழ்நாட்டு அரசியல் வாதிங்க மேல அவ்வளவு நம்பிக்கையா? வீட்ல குண்டே வந்து விழும்!''

''எனக்கென்னங்க ஆச்சு? கேஸோ, குண்டோ, அது ஆதித்யா சார் மேல தானே பாயும்?''

''அ...'' என அதிர்ந்தாள்.

சிரித்து விட்டான் சித்தார்த்.

''பி... கூல்... சித்ரா! டேக் இட் ஸ்போர்ட்டிவ்லி! நான் காண்ட்ரவர்ஸியர் எதையும் எழுதலே! கிட்டத்தட்ட கவர்ன்மென்ட்டுக்கு ஐடியா தர்றேன். நேர் வழியில் அடைய முடியாத எதையும் ஒரு நாளும் தவறான வழியில் அடைய முடியாதுங்கறதை தான் எழுதறேன். இங்கே சில அரசியல்வாதிங்க கொளுத்தற வெயில்ல வெளிச்சத்துக்காக மெழுகுவர்த்தி ஏத்துறாங்க. நான் மெழுகுவர்த்தின்னு சொன்னது மக்களோட வரிப்பணம். ஏமாத்தறாங்க... அதை நான் சுட்டிக் காட்டுறேன். அதுக்காக எனக்கு அச்சுறுத்தல் வந்தா... தைரியமா ஃபேஸ் பண்ணுவேன்... மரணத்தை கூட...''

''நோ... நோ..!'' அவசரமாய் அவன் வாயைப் பொத்த இடக்கரத்தை உயர்த்தியவள்... அவன் விழிகளில் தென்பட்ட எதிர்பார்ப்பும், ஆர்வமும் கண்டு இறக்கினாள்.

''நா... நான் விளையாட்டுக்கு ஏதோ கேட்டேன்.‥ ஆனா, இவ்ளோ சீரியஸா பதில் சொல்றீங்க. டாபிக்கை மாத்துவோம்!''

''ஓக்கே... நானே கேக்கறேன். நீங்க எந்த காலேஜ்ல படிச்சீங்க?''

அதற்கு அவள் பதில் சொல்ல, இடக்கையை ஆட்டி, கண்களில் குறும்பு மின்ன, காற்றில் காதோர முடிகள் நளினமாய் சிணுங்க, உதடுகள் குவிந்து, விரிந்து அவஸ்தையை தர... ரோஸ் நிற கன்னங்களில் சூரியக் கதிர் பட்டு ரேடியமாய் தெறிக்க...

அந்த அழகை இமைக்காமல் ரசித்தவனுக்கு, 'சித்ரா.. ஐ லவ் யூ...' என்று சொல்லி விடலாமா என்ற தைரியம் எழ...

பிரேக்கிட்டு... ஒரு சின்னக் குலுக்கலுடன் கார் நின்றது.

## 8

''வீடு வந்தாச்சு சித்தார்த்...!''

இறங்கியவன் மலைத்துப் போனான்.



அவ்வளவு விஸ்தாரமான... தோட்டத்தோடு அமைந்த மாளிகையை அவன் சினிமாவில் கூட பார்த்ததில்லை.

'கேட் திறந்து கார் எப்போது உள்ளே நுழைந்தது? அந்தளவிற்கு நான் சித்ராவையே பார்த்துக் கொண்டிருந்தேனா?' என்ற உண்மை கிச்சு கிச்சு மூட்டியது.

பணியாட்கள் அவளைப் பார்த்ததும் மரியாதை நிமித்தம் ஒதுங்கி நின்றது கூட வியப்பாய் இருந்தது.

''சித்ரா... எல்லா இடத்திலேயும் மக்களை அடிபணிய வச்சிருக்கீங்க!''

''ஆமாம்... கிட்டத்தட்ட நானும் ஒரு சர்வாதிகாரி தான்! இங்கே உக்காருங்க... அவர்கிட்டே நீங்க வந்திருக்கிற தகவலை சொல்லிட்டு வர்றேன்!''

''ஓக்கே!''

அவன் அமர்ந்ததும் உள்வாங்கிக் கொண்டது சோபா. சுற்றிலும் கண்களை ஓடவிட்டான்.

பர்மா தேக்கில் இழைத்து கட்டப்பட்ட வீடு! நிலைப்படி, அலமாரி, கதவு, ஜன்னல் எல்லாம் வேலைப்பாடுடன் பளபளபத்தது. கூடவே நவீனமும் சேர்ந்து மின்னியது. தரையில் கால் வைக்கவே கூசியது... கிரானைட்டில் முகம் தெரிந்தது. ஒரு தூசி தும்பு இல்லை. சுத்தம்... சுத்தம்..சுத்தம்!

சுவற்றில்... ஏலத்தில் எடுக்கப்பட்ட ஓவியங்கள் பார்க்கத் தூண்டின. கொஞ்சம் பழங்காலத்து புகைப்படங்கள். மேல்நோக்கி வாரப்பட்ட தலையுடன், கோட்-சூட் அணிந்த கனவான்கள். அருகே சென்று உற்றுப் பார்க்க எழுந்தவன், கனத்த சாரீரத்துடன் ஒரு பெண்மணி மென்னகையுடன் அவனருகே வந்ததும் அப்படியே அமர்ந்து விட்டான்.

பின்னாலேயே ட்ரேயுடன் வந்த பணியாள்.

''தம்பி வணக்கம்!''

''யெஸ்.. வணக்கம்!''

''டீ சாப்பிடுவீங்க தானே?''

''ம்...''

''மனோ சொன்னா... சரியா தமிழ் வராதுன்னு. எனக்கு இங்லீஷ் அந்தளவுக்கு வராது. டிஸ்டர்ப் பண்ண விரும்பலே... முத்து...'' என்றாள் பணியாளைப் பார்த்து.

அவன் பவ்யமாய் ட்ரேயை சித்தார்த்திடம் நீட்டினான்.

''தாங்க்ஸ்'' எடுத்துக் கொண்டான்.

''நான் கோவிலுக்கு போய்ட்டிருக்கேன்... வரட்டுமா?''

''பை!''

அவள் போய்விட, டீயைப் பருகினான்.

அவ்வளவு அற்புதம்!

''பணக்காரங்க வீட்டில் தண்ணீர் கூட இனிக்குமாமே!''

அவன் பருகி முடித்த சில கணங்களில் சித்ரா வந்தாள்.

''வாங்க.. சார் கூப்பிடறார்!''

''ஒரு நிமிஷம் சித்ரா.''

''......?!''

''அவர் பேர்க் கூட தெரிஞ்சுக்காம அவரை மீட் பண்றது.. மரியாதையா இருக்காது.''

''இன்னும் ஒரு நிமிஜம் தானே? சஸ்பென்ஸ் உடையப் போகுது. வாங்க!'' அவள் சிரித்த போது.. குழந்தையின் சிரிப்பைப் போல் அத்தனை வசீகரம்.

ஒரு சின்ன தயக்கத்துடன் அவள் பின்னே சென்றான்.

சுகந்தமான நறுமணம். சந்தன நிற திரைச் சீலைகள் மிக சுத்தமாய் அசைந்தாடின.. பெரிய அறை!



ஒரு வீல்சேரில் வயதான மனிதர் வீற்றிருந்தார்.

''சித்தார்த் இவர்தான்!'' அவனுக்கு மட்டுமே கேட்கும்படி கூறினாள்.

இருகரம் கூப்பியபடி அருகில் சென்றவன்,

''வணக்கம் சார்!'' என்றான்.

வழ வழ கன்னத்துடன், எதையோ தொலைத்த கண்களுடன்... அவரைப் பார்த்ததும் மனசுக்கு மிக நெருக்கமாய் உணர்ந்தான்.

''வணக்கம் தம்பி... உக்காருங்க!''

சோபா நுனியில் அமர்ந்தான்.

''மனோ... தம்பி சாப்பிட ஏதாவது...''

''ஆச்சுங்க... சாப்பிட்டேன்!''

''மாமா... இவர்தான்... அந்த சித்தார்த்!''

''தெரியுதே...''

'மா..மா...வா?' அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்.

குறும்பு கொப்புளிக்க அவனிடம், ''சித்தார்த்... இவர்தான் மிஸ்டர் தனஞ்ஜெயன். உங்க எம்.டி. ஆதித்யாவோட அப்பா!''

தூக்கி வாரிப் போட... குபீரென எழுந்து விட்டான்.

''சா... சார்... நீங்களா? எனக்கு எ... எதுவும் தெரியாது'' என்றான் பதட்டத்துடன்.

தனஞ்ஜெயனும் சிரித்து விட்டார்.

''அதனால என்ன? உக்காருப்பா! மனோ எல்லாத்தையும் சொன்னா. இந்த வீட்டு செல்லப் பொண்ணு. குறும்பும் ஜாஸ்தி. எனிவே, இவ சொன்னப்ப கூட பெரிசா எடுத்துக்கலே... வெளிநாட்டுக்காரன் மாதிரி இருக்கே? இங்லீஷ் அப்படித்தான் பேசறே! உன் ஆர்ட்டிக்கிள் எல்லாம் படிக்கிறேன். சூப்பர்... சூப்பர்! நல்லா எழுது.. நல்லா வருவே!''

''தாங்க்யூ.. தாங்க்யூ சார்!''

''மாமா... சித்தார்த்தை நல்லா கவனிங்க... சிரிக்கறப்ப கொஞ்சம் உங்க சாயல் இருக்கில்லே...''

அவர் அதை காதில் வாங்கிக் கொள்ளாமல் அவனிடம் பேசிக் கொண்டிருந்தார். அவனைப் பற்றிய விபரங்கள் பொதுவான விஷயங்கள் என பேசிக் கொண்டிருக்க.

அவனும் பதில் கொடுத்துக் கொண்டிருந்தாலும், அவனுள்ளே பெரிய நதியே உருண்டோடிக் கொண்டிருந்தது.

அவன் அங்கிருந்து கிளம்பும்போது மனசு பாரமாய் இருந்தது. அது சந்தோஷத்தினாலா, வேதனையினாலா என்று புரியவில்லை.

சித்ரா டிரைவரைக் கூப்பிட்டு, அவனை அலுவலகத்தில் இறக்கி விடச் சொல்லி காரில் அனுப்பினாள்.

அவனோ... அவளைப் பார்த்த பார்வையில் சின்ன தயக்கமும், ஏக்கமும் மிகுந்திருந்தது.

அன்றிரவு...

உறக்கம் வராமல் தன் ஃப்ளாட்டில் இங்குமங்கும் நடந்தான். ஏதேதோ எண்ணங்கள் தறிகெட்டுப் பாய்ந்தன. கோபமாய் வந்தது. தனஞ்செயனை நினைக்கையில் உள்ளம் சாந்தமானது. ரெஸ்ட்லெஸ் ஸாக உணர்ந்தான்.

திடீரென கவுதமியின் நினைவு எழுந்தது.

'ரொம்ப நாட்கள் ஆகிவிட்டதல்லவா அந்தம்மாவுடன் சாட் பண்ணி?'

எண்ணியவன் உடனே லேப்-டாப் முன் அமர்ந்தான்.

அவளும் ஆன்லைனில் இருந்தால் நன்றாயிருக்குமே!' மனதிற்குள் பிரார்த்தித்தபடி ஓப்பன் பண்ணினான்.

அவளிடமிருந்து ஏழெட்டு மெயில் வந்திருந்தது.



தான் வெகுநாட்களாய் அவனுடன் தொடர்பில் இல்லாததை கோபத்தில் வெளிப்படுத்தியிருந்தாள்.

''ஸாரி மேடம்!'' என்று அனுப்ப...

நல்லவேளை ஆன்லைனில் இருந்தாள்.

''என்ன ஸாரி?''

''கோபமோ?''

''ஏன் வரக்கூடாதா?''

''கண்டிப்பா வரட்டும். ஆனா, என் மேல் வேண்டாமே பாவம்... சின்னப் பையன்... மன்னிக்கக் கூடாதா?''

''சரி... சரி... எங்கே ஆளையேக் காணோம்? சென்னைக்கு வந் திருப்பதாய் மெசேஜ் அனுப்பியிருந்தே? ஏன்? இப்ப எங்கே இருக்கே?''

''இப்பவும் சென்னையில்தான் இருக்கேன், என் நண்பன் சித்தார்த் துக்கு இங்கே பெரிய பத்திரிகையில் வேலை கிடைச்சிருக்கு. அவன் கூடதான் தங்கியிருக்கேன். சென்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. புதுசா பிறந்த மாதிரி உணர்றேன்!''

''நல்லது... அப்ப உன் மும்பை வேலை என்ன ஆச்சு?''

''லாங் லீவு போட்டாச்சு! இதெல்லாம் விடுங்க... எனக்கு உங்களைப் பார்க்கணும் மேடம். கொடைக்கானல் ரொம்ப அழகாயிருக்கும்னு சொன்னாங்க. அப்படியே உங்களையும் மீட் பண்றேன். வரட்டுமா?''

அதற்கு பதிலே வரவில்லை கவுதமியிடமிருந்து.

அவனும் எவ்வளவோ முயற்சித்தான்.

பதிலே வரவில்லை.

ஏன்?

'மீட் பண்ணலாம் என்று கேட்டது பிடிக்கவில்லையா அதனால் கோபமா?'

வருத்தத்துடன் படுக்கையில் விழுந்தான். ஜன்னல் வழியே நட்சத்திரங்கள் மினுக், மினுக் என எரிந்துக் கொண்டிருந்தது.

அதில் ஒன்று மட்டும் மிக பளிச்சென்று.

சித்ராவைப் போல்!

சித்ரா... நீ கைக்கெட்டும் மேகம் என்று நினைத்தேன். அதோ அந்த நட்சத்திரத்தைப் போல எட்டாத உயரத்தில் அல்லவா இருக்கிறாய்.''

* * *

மறுநாள் விடிவதற்காக காத்திருந்தான்.

அவன் தன் கேபினுக்குள் நுழைந்த பத்தாவது நிமிடம் சித்ராவும் வந்தாள்.

''வாங்க... குட்மார்னிங்...''

''வெரிகுட்மார்னிங்...''

''ஸாரிங்க... நீங்க யாருன்னு தெரியாமலே நான் பாட்டுக்கு ஆதி சார்கிட்டே சொல்லி இங்கே வேலை போட்டு தரச் சொல்றேன்னு அதிகப் பிரசங்கித்தனமா...''

''...........?!'' சிரித்தாள்.

''நீங்க யாருன்னு எங்கிட்ட சொல்லியிருக்கலாம்!''

''சொல்லியிருந்தா?''

''.........?!''

''என்கிட்ட இந்தளவு ப்ரண்ட்லியா பேசியிருக்க மாட்டீங்களே...!''

என்றவளின் கண்கள் எதையோ சொல்லாமல் சொல்லவும், மூடி மறைக்கவும் பிரயத்தனப்பட்டது.

அவன் இதயத்திற்குள் துலிப் மலர்கள் மலர்ந்தன.



# 9

''ரொம்ப... ரொம்ப தாங்க்ஸ் சித்ரா! எவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவங்க. ஆனா, என்கிட்ட மட்டுமில்லே... எல்லார்கிட்டேயும் எளிமையாப் பழகறீங்க?''

''அது என்னோட நேச்சர் சித்தார்த். எனக்கு பந்தா பண்றதும் பிடிக்காது, பண்றவங்களையும் பிடிக்காது!''

''ஆனா, மத்த எல்லோருக்கும் நீங்க யாருனு தெரிஞ்சிருக்கே?''

''ஆமா, ஏன்னா... நீங்க சம்திங் டிஃபரண்டா, சம்திங் ஸ்பெஷலா தோணுச்சு. ஜஸ்ட் ஃபார் ஃப்... கொஞ்சம் விளையாடி பார்க்கலாம்னு தோணுச்சு. பட், இதனால உங்க மனசை நான் ஹர்ட் பண்ணிட்டேனா?''

''தேவதை மாதிரி ஒரு பொண்ணு இந்த மாதிரி த்ரில்லிங்கா விளையாடிப் பார்த்தா... கஷ்டப்படுவாங்களா என்ன? இந்த விளையாட்டு எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

அவன் வார்த்தைகள் சித்ராவை வெட்கப்பட வைத்தது. அவன் கண்களை நேரே பார்க்க முடியாமல் இங்குமங்கும் பார்த்து அந்த நேரத்து தர்ம சங்கடத்தை தவிர்க்கப் பார்த்தாள்.

சித்தார்த்துக்கு அந்த கண்களில் ஒளிந்து கண்ணா மூச்சி ஆடிக் கொண்டிருந்த காதலின் நுனி பிடிபட்டு விட்டது.

பெரும்பாலும் காதல்... வார்த்தைகளில் வெளிப்படுவதைவிட உடல் மொழியால் தானே கண்டுணரப்படுகிறது?

சித்தார்த்துக்கு சந்தோஷத்தில் மூச்சடைத்தது. எனினும் அவளை மேலும் சங்கடப்படுத்தி வதைக்காமல் டாபிக்கை மாற்றினான்.

''சார் தான் அந்த விஜபின்னு எதிர்பார்க்கவே இல்லே சித்ரா. அவரை சந்திச்சதே என் பாக்கியமா நினைக்கிறேன்.''

''மாமாவுக்கும் உங்களை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. நீங்க கிளம்பிட்ட பிறகும் உங்களைப் பத்தி தான் பேசிக்கிட்டே இருந்தார்.''

''ரியல்லி?'' கண்கள் பிரகாசமாய் மின்னின.

''சாரோட வொய்ஃப்?''

''அந்த கேள்விக்கு சில கணங்கள் மவுனித்தவள்,

''அவங்க இப்ப எங்கே இருக்காங்கன்னே... தெரியலே...''

''வாட்?''

''ஆமா சித்தார்த். அவங்களைப் பத்தி அவ்வளவு தைரியமா யாரும் என்கிட்ட கேட்டதுமில்லே... நானும் சொன்னதில்லே. உங்ககிட்டே மட்டும் சொல்றேன். நானும் அத்தைய பார்த்ததில்லே. நான் பிறக்கறதுக்கு முன்னாடியே அவங்க தனியாப் போய்ட்டாங்க. மாமாவோட மனஸ்தாபம்!''

''இத்தனை வருஷத்துல அவங்களைத் தேடவே இல்லையா?''

''இல்லாமலா? கவுரவமான குடும்பங்கறதால போலீஸ் அது இதுன்னு வெளிப்படுத்தலே. வெளி உலகத்துக்குத் தெரியாம தேடுதல் வேட்டை நடந்துட்டுதான் இருக்கு. இன்ஃபாக்ட்... மாமா பத்திரிகை ஆரம்பிச்சதே... அத்தைக்காகத்தான்!''

''......?!''

''ஆமா சித்தார்த்! அத்தைக்கு எழுத்தார்வம் அதிகம். கதை, கவிதைல்லாம் எழுதுவாங்களாம். அதனால தான், பெண்கள் பெயர்ல வர்ற கதை. கவிதைகளின் கையெழுத்தை மாமாவே நேரடியா ஆய்வு செய்வார்.

என்னைக்காவது ஒரு நாள் எங்க பத்திரிகைக்கும் அவங்க எழுதி அனுப்புவாங்கன்னு ஒரு நம்பிக்கை!''

''இது எப்படி சாத்தியம்? இங்கே அனுப்பாம வேற பத்திரிகைகளுக்கு அனுப்பலாமில்லையா?''



''இம்பாஸிபிள்! நம்பர் ஒன் பத்திரிகையே நம்மளது தானே? அவங்களும் அந்த மாதிரி இந்த இதழ்களை தானே செலக்ட் பண்ணி அனுப்புவாங்க!''

''இத்தனை வருஷமா அனுப்பலையே... அதை யோசிங்க...''

முகம் மாற, ''ஒரு வேளை அவங்க இந்த உலகத்திலேயே...''

''நோ... நோ... மேடத்தை போட்டோவுல பார்த்தேன். போல்டா, தன்னம்பிக்கையோட, எதையும் ஃபேஸ் பண்ற தைரியம் தெரிஞ்சது. நீங்க தப்பா யோசிக்காதீங்க!''

''பாவம் மாமா... இருபத்தஞ்சு வருஷமா நம்பிக்கையோட காத்திட்டிருக்கார்!''

அதைக் கேட்ட சித்தார்த்தின் கண்கள் பனித்தன. அவசரமாய் அவளறியாமல் துடைத்துக் கொண்டான்.

''எல்லாத்துக்கும் ஒரு லேடிதான் காரணம். உண்ட வீட்டுக்கு கேடு நினைச்ச அந்த லேடி நிச்சயமா நல்லாயிருக்க மாட்டா!''

திடீரென அவள் குரலில் ஆத்திரம். சித்ராவின் அழகான முகத்தில் முதன் முதலில் அப்படியொரு ஆவேசத்தைப் பார்த்தபோது திகைப்புதான் ஏற்பட்டது.

அந்த நேரம்...

சித்தார்த்தின் செல்போன் அழைத்தது.

எடுத்துப் பார்த்தவன் முகத்தில் கணநேரம் இருள் பரவியது சித்ரா கவனிக்காமலில்லை.

அவன் சட்டென கட் பண்ணினான்.

* * *

தன் ஃப்ளாட்டுக்கு வந்தன் ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்திருந்த போனை எடுத்து ஆன் பண்ணினான்.

பத்து மிஸ்டு கால்கள்.

எல்லாமே அவள் ஒருத்தியிடமிருந்து.

பார்க்கவே ஆத்திரம் ஜிவ்வென உச்சியில் ஏறி அவன் முடியைக் கொத்தாய் பிடித்து உலுக்கியது.

அவள் நம்பரை அழுத்தினான்.

ஆசையாய் ஒலித்த அவள் குரலை பேச விடாமல் உச்சஸ்தாயியில் கத்தினான்.

''ஏய்... எத்தனை முறை சொல்லுவேன்? எனக்கு போன் பண்ணாதே... பண்ணாதேன்னு. கட் பண்ண பண்ண மறுபடி மறுபடி போன்! நமக்குள்ளே எல்லாமே முடிஞ்சு போச்சு. அறுந்த உறவு அறுந்ததுதான். இதுதான் லாஸ்ட் வார்னிங். மறுபடியும் தொந்தரவுப் பண்ணியோ... கொல்லவும் தயங்க மாட்டேன். ஷிட்!''

மறுபடி ஸ்விட்ச் ஆஃப் செய்து படுக்கையில் விழுந்தவன்... தன் உள்ளச் சூட்டை தணிக்க... சித்ராவின் முகத்தை மனக்கண்ணில் கொண்டு வந்தான். அன்றைய... சித்ராவுடனான சம்பாஷணைகளை ரீப்ளே செய்தான்.

அவனைச் சுற்றி தென்றல் கவ்விக் கொண்டது.

* * *

சித்தார்த்துக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. ஆதித்யா காரை ஓட்ட... அவன் பக்கத்தில் அமர்ந்திருப்பது அவன் தானா?

அஃபிஷியலாய் ஒரு மினிஸ்டரை பார்க்க அவர் வீட்டுக்கு போவதாகச் சொல்லி, அவனையும் தன்னுடன் வரச் சொன்னான் ஆதித்யா.

இதுவரை அப்படி யாரையும் அவன் அழைத்துச் சென்றதில்லை. அதுவும் அவனுடைய ஆடிக் காரில்.

''என்ன சித்தார்த் கலக்கறே?''



''எ... எது சரி?''

''ரிலாக்ஸ்... அப்பா சொன்னார். அவரைப் பார்க்க வந்ததா... அவருக்கு உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சாம். அந்தப் புள்ளைய பார்க்கறப்ப... ரொம்ப பழகினவன் மாதிரி இருந்தான். பணிவா, திறமையா, அழகா, இப்படி எல்லாமே சேர்த்து பார்க்கறது அபூர்வம்னு... உன் பாட்டை தான் பாடறார்.''

''தாங்க்யூ சர்!'' கண்கள் கூச்சத்தில் சுருங்கின.

''மனோ அதுக்கு மேலே... உன் எழுத்தை அப்படி பாராட்டறா...''

''..........?!''

''எனக்கும் கூட உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு சித்தார்த்!'' இடக்காரத்தால் அவன் தோளில் கைபோட்டு தட்டிக் கொடுக்க...

அவன் திரும்பி ஆதித்யாவைப் பார்த்த பார்வையில் நன்றியும், பாசமும் மிகுந்திருந்தது.

அதன் பிறகும்... ஆதித்யா அவனிடம் வேலை தவிர்த்து தன்னுடன் வெளியில் அழைத்துச் செல்வது தொடர்ந்தது. அவனுடன் ரெஸ்டாரெண்ட், சினிமா என சென்றான்.

சித்தார்த்தும் கிடைக்கிற சந்தர்ப்பங்களையும், சில சமயம் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியும் தனஞ்ஜெயனை சென்று பார்த்து வருவான். அந்த நிமிடங்கள் அவனுக்கு மட்டுமல்ல... தனஞ்ஜெயனுக்கும் இனம் புரியாத பரவசத்தை தந்தது. மனோசித்ரா... அவன் எல்லோருக்கும் பிடித்தவனாய் இருப்பதில் சந்தோஷப் பட்டாள். யசோதாவும் அவன் வீட்டிற்கு வரும்போதெல்லாம் கனிவாய் பேசுவாள்.

அன்று...!

தினசரிப் பணிகளில் மூழ்கியிருந்தான் சித்தார்த். இன்டர்காமில் அழைத்தான் ஆதித்யா.

''சா்...''

''என் ரூமுக்கு வாயேன் சித்தார்த்.''

''யெஸ் சா்!''

அடுத்த இரண்டு நிமிடத்தில் அவன் அறையில்!

''எந்த வேலையில் இருந்தாலும் சப் எடிட்டர் கிட்டே குடுத்து உடனே கிளம்பி என் வீட்டுக்கு என்னோட வர்றே!''

''......?''

''என்ன அப்படிப் பாக்கிறே? இது அப்பாவோட உத்தரவு. நீதான் அவரை மயக்கி வச்சிருக்கியே! இன்னைக்கு என் அம்மாவோட பர்த்டே! அப்பா மற்ற முக்கியமான நாளைய விட இந்த நாளைதான் அன்னதானம், அபிஷேகம்னு கொண்டாடுவார். எங்க குடும்ப விருந்தில நீயும் கலந்துக்கறே!''

நெகிழ்ச்சியில் கரைந்து போனான்.

அன்றைய அந்த விருந்து வயிறை மட்டுமல்ல மனசையும் நிறைத்தது.

கூட... சித்ராவும் பரிமாறினாள். அதை இளைஞா்கள் இருவரும் மிகவும் ரசித்தனா்.

மலா்ந்த முகம், சாதாரண உணவையே அறுசுவை விருந்தாக்கி விடும். அற்புதமான விருந்தை?

## 10

''மெனி... மெனி மோர் ரிடர்ன்ஸ் ஆஃப் த டே!'' தருணிடமிருந்து அப்படியொரு மெஸேஜ் வர தூக்கி வாரிப் போட்டது கவுதமிக்கு.

'சந்திக்கலாமா? என்று அவன் கேட்டான் என்பதற்காக கோபப்பட்டு மெஸேஜ் அனுப்பாமலே இருந்தாள். ஆனால், இப்போது அப்படி இருந்துவிட முடியாது.



'என் பர்த்டே என்று இவனுக்கு எப்படித் தெரியும்? நான் யாரிடமும் சொன்னதே இல்லையே!'

அதையே அவனுக்கு மெஸேஜ் அனுப்பினாள்.

'எனக்கு எல்லாமே தெரியும்!' என்ற ஒற்றை பதிலோடு நிறுத்திக் கொண்டான். அவள் அடுத்தடுத்து கேட்ட கேள்விக்கு எந்த பதிலும் தரவில்லை.

* * *

கைநிறைய சம்பளம்! தன் மேல் அன்பை வாரி இறைக்கும் முதலாளியின் குடும்பம். அந்த சந்தோஷமே... சித்தார்த் முகத்தை மேலும் வசீகரமாக்கி இருந்தது.

பைக்கில் வேகமாய் சீறிப் பாய்ந்த நகரின் மிகப் பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸை பார்த்தவன்... வேகத்தைக் கட்டுப்படுத்தினான்.

சித்ராவுக்கு ஏதாவது பரிசுப் பொருள் வாங்கினால் என்ன? அவளுக்கு என்னப் பிடிக்கும்?

ஒருமுறை, 'எனக்கு பட்டுப் புடவைன்னா... அவ்வளவு இஷ்டம். தினமும் ஆபீஸ் வர்றதால... ஜீன்ஸ், சல்வார்னு போட்டுக்கிட்டிருக்கேன். அதே மாதிரி எனக்கு வாட்ச் கலெக்ட் பண்றதுன்னா உயிர் இதுவரை இருநூறு வாட்ச்சுக்கும் மேலே வாங்கி இருக்கேன்னா பார்த்துக்குங்க'' என்று சொன்னது நினைவிற்கு வர...

வண்டியைத் திருப்பினான்.

அவளுக்காக பார்த்துப் பார்த்து பர்சேஸ் பண்ணினான். முப்பதாயிரத்தில் பட்டுப்புடவை, பத்தாயிரத்தில் ஒரு வாட்ச், எட்டாயிரத்தில் ஒரு செண்ட் என வாங்கும் போதே அவன் உற்சாகமானான்.

* * *

அந்த வருடத்திய டர்ன் ஓவர்களைப் பற்றி தந்தையிடம் சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்தான் ஆதித்யா.

''அதுவும் புதுசா ஆரம்பிக்க டெய்லி பேப்பர் பிச்சிக் கிட்டு ஓடுது. அதுக்கு முக்கியமான காரணம் சித்தார்த். அவனோட சின்ஸியாரிட்டியும், தனக்கு கீழே உள்ளவங்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்கற அட்மினிஸ்ட்ரேஷனும் பக்கா...!''

''ஆமாம்ப்பா... ரொம்ப நல்ல பையன். அவன் கிட்டே பேசிக்கிட்டிருந்தா... உடம்பை நீவி விடற மாதிரி... மனசுக்கு இதமாயிருக்கு. அதுவும் நீ ரொம்ப ஈஸியா யாரையும் பாராட்டிட மாட்டே! நீயே பாராட்டறேன்னா.... அவன் ரொம்ப திறமைசாலியா தான் இருப்பான்! அதுவும் எனக்காக தொழில் தொடர்பான அத்தனை பொறுப்பையும் ஏத்துக்கிட்ட பிறகு... உனக்குன்னு இருந்த ப்ரண்ட்ஸ் கிட்ட பேசக்கூட டைம் இல்லாம ஆகிடுச்சு. இப்ப நீ சித்தார்த் கூடதான் கிடைக்கிற டைமை ஸ்பென்ட் பண்றே... உன்னோட செலக்ஷன் சோடை போனதில்லையேப்பா!''

''ஆமாம்ப்பா...'' என்றான் சிறுநகையுடன்.

''அப்புறம்...''

''சொல்லுங்கப்பா!''

''உனக்கும் இருபத்தெட்டு வயசாய்டுச்சி!''

''..........?!''

''இதுக்கு மேலேயும் உன் கல்யாணத்தை தள்ளிப்போட வேணாம்னு நினைக்கிறேன். என்னப்பாச் சொல்றே?''

''............?!''

''உன் அம்மா இருந்திருந்தா... இத்தனை வயசு வரைக்கும் உன்னை பிரம்மச்சாரியா விட்டு வைத்திருக்க மாட்டா. இந்நேரம் பேரப்பிள்ளைகளோட கொஞ்சிக்கிட்டிருந்திருப்பேன். மனோவுக்கும் பொறுப்பு வந்திடுச்சு. உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் முடிஞ்சிடுச்சின்னா... எனக்குக் கொஞ்சமாவது நிம்மதி கிடைக்கும்.''



மனோ பெயரைச் சொன்னதும் ஏன் மறுக்கப் போகிறான்?

''சரிப்பா...!'' என்று ஒற்றை வார்த்தையில் பதில் கூறிவிட்டு வெளியேறினான்.

எதற்காகவோ உள்ளே நுழைய முயன்ற மனோ சித்ரா... உள்ளே நடந்த உரையாடல்கள் காதில் விழ, கால்கள் பின்னோக்கி நகர்ந்து அடுத்த அறைக்கு சென்று விட்டாள்.

குழப்பமாய் இருந்தது.

ஆதிக்கும் தனக்கும் திருமணப் பேச்சு நடப்பதும் அவனுக்கு தன் மேல் சாஃப்ட் கார்னர் இருப்பதும் அறிந்த விஷயம்தான்! ஆனால், அது போன்ற ஐடியா எதுவும் மனதில் உதயமாகா விட்டாலும், மறுக்க நினைத்ததில்லை. ஆதியின் மனதில் இருப்பது தெளிவாய் புரிந்து விட... இப்போது உள்ளம் முழுக்க சங்கடம் விரவி இருந்தது.

'ஏன்... எதனால்?

இதுநாள் வரை இல்லாத தடுமாற்றம்... இப்போது மட்டும் ஏன்?'

* * *

டி.வி.யில் பழைய பாடல்கள் ஒளிபரப்பாகி கொண்டிருந்தது.

''உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல...

உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல...''

கே.ஆர். விஜயா உணர்வுப் பொங்க பாடி ஆட... தனஞ்ஜெயனுக்கு கண்கள் துளிர்த்தன.

வைதேகிக்கு ரொம்ப... ரொம்ப பிடித்த பாட்டு. அடிக்கடி அவளது உதடுகள் முணுமுணுக்கும் பாடல்.

'எங்கேடி இருக்கே? அப்படி என்னப் பண்ணிட்டேன்னு என் உறவே வேணாம்னு... என் கண்ணுக்குத் தெரியாத தூரத்துக்கு போய்ட்டு கண்ணாமூச்சி ஆடிக்கிட்டிருக்கே? நம்ம புள்ளையப் பத்திக் கூட

நினைச்சுப் பார்க்க மாட்டியா? அப்படியென்ன வைராக்கியம்? உன் பிரிவைத் தாங்க முடியாமதான்டி வீல் சேரிலேயே முடங்கிக் கிடக்கிறேன். உன்னைப் பார்ப்பேனா? அந்த சந்தோஷம் என் வாழ்நாள்ல வருமா வைதேகி?'

உடல் குலுங்க... அவரது விழிகள் போட்டோவில் இருந்த வைதேகியின் மேல் நிலைத்தது.

இருபத்தி ஐந்து வருடங்கள் முன்பு!

* * *

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் தன் காதல் மனைவி வைதேகியுடன் வசித்து வந்த தனஞ்ஜெயன் அங்கு பெரும் தொழிலதிபர். புகழ் பெற்ற கம்பெனி முதலாளி. மனைவி மீது ஏகப்பட்ட பிரியம். மூன்று வயதை நெருங்கும் ஆதித்யா... ஒரே பிள்ளை...

எழுத்தாற்றல் மிக்கவள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் நோட்டில் கவிதைகளையும், சிறு கதைகளையும் எழுதி வைப்பாள். அவைகளை தொகுப்பாக வெளியிடும் ஆர்வமும் இருந்தது. நேர்மையும், புரட்சிகரமான எண்ணங்களும் கொண்டவள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலைப்பாட்டில் அதீத பற்று உள்ளவள். தன் கணவன் மீது அளப்பரிய காதல் கொண்டவள், அவர் ரோடில் போகும் பெண்களை யதேச்சையாக நிமிர்ந்து பார்த்தால் கூட தாங்கிக் கொள்ள முடியாத பொஸசிவ் இருந்தது. இருவருக்குமே பூர்விகம் தஞ்சாவூர். வைதேகி வேறு வகுப்பைச் சார்ந்தவள் என்பதால் இரு வீட்டாரும் அவர்கள் காதலை எதிர்த்தனர். அதனால், அப்போதே அவர்களை ஒதுக்கி திருமணம் செய்து கொண்டது... ஒருவரையொருவர் எதற்காகவும், யாருக்காகவும் விட்டுப் பிரிய முடியாத அளவு மன இணக்கம் ஏற்பட்டதை உணர்ந்ததால்தான்!

தனஞ்ஜெயன் வெளிநாட்டில் பட்டப்படிப்பு படித்தவர் என்பதால் மனைவியை அழைத்துக் கொண்டு அமெரிக்காவிலேயே தங்கி, தொழிலையும் ஆரம்பித்து.. பணமழை கொட்டியது.



அழகான மகன், அற்புதமான மனைவி, அளவற்ற செல்வம் என வாழ்க்கை... தேம்ஸ் நதியில் படகு சவாரி செய்வதுபோன்று அருமையாகச் சென்றது.

அப்போது... அவரது அலுவலக செகரெட்டரியாக நுழைந்தவள் தான் மெட்டில்டா!

பேரழகி!

மனைவிட மீது காதலும் மரியாதையும் கொண்டு, அவள் காலைத் தொட்டு வணங்கும் கணவன் கூட மெட்டில்டாவைப் பார்த்து விட்டால் ஒரு கணமேனும் கற்பனையில் அவளோடு இணக்கமாய் இருப்பது போன்று எண்ணாமல் இருக்கவே முடியாது. கொஞ்சம் மர்லின் மன்றோவின் சாயலில் இருந்ததும்... அவள் தன் அழகின் மேல் கர்வம் அவள் சிறு வயதின் போதே தந்தை ஒரு பெண்ணோடும், தாய் ஒரு ஆணோடும் தனித்தனியாய் பிரிந்து விட்டனர். ஏதேதோ வேலைப் பார்த்து... தன் ஜீவனத்தை தானே பார்த்துக் கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலை. தினம், தினம் போராடி பதினெட்டு வயதை எட்டுவதற்குள் சில பாலியல் பலாத்காரங்களையும் அனுபவித்து விட்டாள்.

எல்லாம் பசிக்காக! அந்த பசியைப் போக்கும் பணத்துக்காக!

தன் வாழ்நாள் லட்சியமே... குறுகிய காலத்தில் பணக்காரியாக வேண்டும் என்பதுதான். அதற்காக எதையும் செய்யத் துணிந்தாள்.

தவறான பாதையில் எவ்வளவு தூரம் போய் விட்டாலும் திரும்பிவிட வேண்டும். ஆனால், மெட்டில்டா வேண்டுமென்றே அந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தாள்.

அழகை ரசிப்பதில் தவறில்லை. அந்த அழகு உயிரற்ற பொருளாய் இருக்கும் பட்சம் பிரச்னையே இல்லை.

தனஞ்ஜெயனுக்கும் ரசனை இருந்தது. யாருமறியாமல், மெட்டில்டாவின் இளமையை திருட்டுத் தனமாய் ரசித்தார். தெரியாதது போல்,

வேண்டுமென்றே உரசினார். அவரின் தைரியம் அந்த எல்லை வரைதான்.

ஆனால், மெட்டில்டா விடுவதாய் இல்லை.

## 11

தனஞ்ஜெயனை அவளுக்குப் பிடித்திருந்தது. அதைவிட அதிகமாய் அவரின் பணம் பிடித்திருந்தது. எப்படியாவது மயக்கி அவர் மூலம் ஒரு குழந்தையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவள் திட்டம்.

தனஞ்ஜெயனுக்கு எதிலெல்லாம் நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ, ஜோதிடத்தில் ஏகப்பட்ட நம்பிக்கை இருந்தது. அதிலும் அவரின் குடும்ப ஜோதிடர் சொல்வதுதான் வேதவாக்கு.

அவர் ஒரு குண்டை தூக்கிப் போட்டார்.

'உனக்கு ஒரு பெரிய கண்டம் காத்திருக்கிறது. அது உயிர் பலியாக இருக்கலாம். அல்லது ஏதாவதொரு வடிவில் மனைவியோடு பிரிவு நிச்சயம்... என்று!'

விதிர் விதிர்த்துப் போனார்.

சிறு வயதில் கூட அம்மா அவருக்கு ஜோதிடம் பார்த்ததில், அவருக்குக் கண்டம் இருப்பதாகச் சொன்னது நினைவிற்கு வந்தது.

வைதேகிக்குத் தெரிந்தால் பதறி விடுவாள். அருமை மகனை ஒரு கணமும் பிரிய முடியாது. சப்போஸ் ஏதாவது ஆகி விட்டால்? பணம் பெரிய விஷயமல்ல. நிறையவே குவிந்து கிடக்கிறது. குழந்தையுடன் தனித்து நிற்பாளே! அதுவும் வைதேகிக்கு நான்கைந்து குழந்தைகள் வீடு முழுக்க ஓடியாட வேண்டும் என்று ஆசைப்பட்டாளே! அட்லீஸ்ட் அதில் பாதியாவது நிறைவேற்ற வேண்டும்.



'கர்ப்பப்பை ஸ்ட்ராங் இல்லை. பிள்ளை பிறப்பை தள்ளிப் போடுங்கள்' என்ற மருத்துவர்கள் அறிவுரைப்படி மருந்துகள் உட்கொண்டு வருகிறாள். குறைந்தது... இன்றும் ஓரிரண்டு வருடங்கள் ஆகும் கரு சுமக்க! அதற்குள் எனக்கு ஏதேனும் ஆகி விட்டால்?'

தனஞ்ஜெயன் பிஸினஸை விட இதில் கவனம் செலவிட்டார். விசாரித்துப் பார்த்ததில்... ஒரு வழி கிடைக்க... அதன் படியேச் செய்தார். அதன்படி தன் விந்தணுவை வங்கியில் பத்திரப் படுத்தினார். அதைத் தக்க நேரத்தில் மனைவியிடம் தெரியப்படுத்தலாம் என்று அப்போதைக்குச் சொல்லாமல் விட்டார். இது மெட்டில்டாவிற்கு தெரியும்.

சாவு எந்நேரமும் வரலாம் என்ற பயத்தில் வாழ்க்கையை உல்லாசமாய் அனுபவித்தார். கிளப், ரேஸ், டிஸ்கோதே என மகிழ்ந்தார்.

ஒரு நாள் அலுவலக சம்பந்தமாய் பார்ட்டி! போதை தலைக்கேறியது. வீட்டிற்குச் செல்ல முடியவில்லை. மெட்டில்டா அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தாள். அவர் மூலம் எப்படியாவது ஒரு குழந்தையை பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் மூலம் சொத்தை அபகரிக்க வேண்டும்.

அவருடன் ஹோட்டல் அறையில் எவ்வளவோ மயக்க முயற்சித்தாள். அந்த விஷயத்தில் தனஞ்ஜெயன் ஒத்துழைக்கவேயில்லை!

அது பெண் உடல்தான்! ஆனால், முகம் வைதேகியுடையது அல்லவே! தள்ளி விட்டார்.

ஆத்திரம் ஏற்பட்டாலும்... அறிவுப் பூர்வமாய் யோசித்தாள்.

கம்பெனி லெட்டர் பேட் அந்த சமயம் அவளிடம்தான் இருந்தது. அதில் அந்த சந்தர்ப்பத்தில் ஒரு கையெழுத்து வாங்குவது பெரிய விஷயமாய் இல்லை.

ஒரே அறையில் இருவரும் தங்கியிருந்ததை செய்தியாய் அலுவலகத்தில் பரப்பவும், வைதேகி காது வரைக்கும் கொண்டு சென்றதும் எளிதாகவே இருந்தது.

நாட்கள் சென்றது.

வைதேகி அவரறியாமல் அவரை கண்காணிக்க... மெட்டில்டாவிடம் கொஞ்சம் நெருக்கமாய் பழகுவது தெரிய வந்தது.

வீட்டில் பெரும் பிரளயம் ஏற்படுகிறது.

தனஞ்ஜெயன் மனைவியின் குற்றச்சாட்டை மறுத்தார். அவளை நம்ப வைக்க மெட்டில்டாவை டிஸ்மிஸ் செய்ய... அவளோ... 'அப்படியானால் என் வயிற்றில் வளரும் உங்கள் குழந்தைக்கு என்ன வழி?' என வைதேகி இருக்க... அவரிடம் கேட்டாள்.

அப்படியொரு நில நடுக்கத்தை வைதேகி அதற்கு முன் அனுபவித்ததில்லை.

தனஞ்ஜெயன் நடுங்கி விட்டார்.

'ஒரு போதும் இது உண்மையாய் இருக்க வாய்ப்பில்லை' என சத்தியம் செய்தார்.

'உண்மை என நான் நிரூபிக்கிறேன்' என்ற மெட்டில்டா கர்ப்பத்தையும், டிஎன்ஏ மூலம், அது தனஞ்ஜெயன் குழந்தைதான் என்பதையும் மருத்துவ அறிக்கை மூலம் நிரூபித்தாள்.

அதற்கு மேல் ஒரு வார்த்தைப் பேசவில்லை வைதேகி. இந்தியா செல்வதற்கான எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிட்டு, ஆதித்யாவை கையில் பிடித்துக் கொண்டு பெட்டியுடன் வெளியேற... சமாதானமாகி விடுவாள் என்று அவரும் அதுவரை அமைதியாய் இருந்து... திடுதிப்பென அவள் கிளம்பவும் துடித்துப் போனார்.

''வைதேகி... நான் எந்த தப்பும் பண்ணலேம்மா... எப்படி உனக்குப் புரிய வைப்பேன்... தயவு செய்து போய்டாதே!''

''ஆதி கிளம்பு... இந்தாங்க.. இது உங்களோடது'' என அவர் கையில் அழுத்திய பொருள் தாலிக்கொடி!

அதிர்ச்சியில் பேச்சு வரவில்லை.



மகனை அழைத்துக் கொண்டு நகர... ஆதித்யா அம்மாவின் கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அப்பாவை கட்டிப் பிடித்துக் கொண்டான்.

அவனுக்கு இயல்பாகவே அப்பா மீது பாசம் அதிகம்.

''வரப்போறியா இல்லையா?'' மகனை அதட்ட...

''என்ன பிடிவாதம் வைதேகி? நான் சொல்லியுமா என்னை நம்பலே? அப்ப இத்தனை வருஷம் லவ் பண்ணினது குடும்பம் நடத்தினதெல்லாம் எந்த நம்பிக்கையில்?

தாம்பத்யங்கறது என்ன? ஒருத்தரையொருத்தர் நம்பறதுதானே? உன்னை நான் நம்பலே? இந்தப் பிள்ளைய எனக்குதான் பெத்தேன்னு நம்பலே? அதே மாதிரி என்னை நம்பு!''

அவர் உதாரணத்துக்கு தன்னையே கூறாக்கி காட்ட ஆத்திரமானாள்.

''நீ என்னை நம்புனாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. நான் உன்னை நம்ப மாட்டேன்! எதை வேணாலும் மன்னிச்சிடுவேன். நம்பிக்கை துரோகத்தை மன்னிக்கவே மாட்டேன். நான் இருந்த இடத்தில் இன்னொருத்தியா? இந்த நெஞ்சுல இன்னொருத்தியோட முகம்! ச்சீ... கேவலமாயிருக்கு. நீயில்லேன்னா நான் செத்துட மாட்டேன். என் வாழ்க்கைய வாழ்ந்து முடிப்பேன். ஆதி... ஆசையா பெத்து வளர்த்த பிள்ளை! என்னைப் பிரிஞ்சி வேணா இருப்பானே தவிர, உன்னைப் பிரிஞ்சிருக்க மாட்டான். அவனுக்கு நான் காலம் முழுக்க வேதனையைத் தர விரும்பலே... நீயே வச்சுக்க!''

பிள்ளையை இழுத்தணைத்து முகம் முழுக்க முத்தம் கொடுத்து... கெஞ்ச... கெஞ்ச... விரைந்து வெளியேறி விட்டாள்.

அன்றிலிருந்து இன்று வரை கண்ணில் படவில்லை. இந்தியாவிற்கு வந்தது மட்டும்தான் தெரியும். வடக்கு பக்கம் இருக்கிறாளா, தெற்கு பக்கம் இருக்கிறாளா என்று ஒன்றும் தெரியாது.

அவள் சென்றபின் தனஞ்ஜெயனின் வாழ்க்கை வறண்ட பாலை வனமாகி விட்டது. தன் பிஸினஸை இழுத்து மூடி விட்டார். முரண்டு பிடித்த மெட்டில்டாவிடம் சொத்தில் பெரும்பகுதியை கொடுத்து, ''காட்டி மிரட்டிக் கொண்டிருக்கும் கருவை கலைத்து விடும்படி கஞ்சலாய் கூறிவிட்டு இந்தியாவுக்கே திரும்பி விட்டார்.

தனது வைதேகியை கண்டுபிடிக்க ஒரே வழி பத்திரிகைதான். அவளுக்காகவே பத்திரிகை ஆரம்பித்தார்.

பழையவைகள் வரிசை பிடித்து அலைகழிய... கண்கள் சுரந்தது... தனஞ்ஜெயனுக்கு.

* * *

பிரவுன் நிற ஷார்ட்ஸும், சந்தன நிற டி ஷர்ட்டும் அணிந்திருந்த சித்தார்த்... சுடச்சுட ரெண்டு ஆம்லெட்டை போட்டுக் கொண்டு டேபிள் முன் வந்தமர்ந்தான்.

ரொட்டியின் மீது வெண்ணெய் தடவி வாயில் கொண்டு போன சமயம்...

காலிங் பெல் சத்தம்!

'காலையிலேயே யாரது? அதுவும் என்னைத் தேடி இதுவரை யாரும் வந்ததில்லையே! ஹவுஸ் ஓனருக்கு பணத்தை அவரோட அக்கவுண்ட்லேயே போட்டுடறேனே! அயர்னிங், பால் என்று சம்பந்தப்பட்ட யாரையும் வீடு வரை வர விடுவதில்லையே!'

அதற்குள் ஆயிரம் கேள்விகள் முளைக்க... கதவைத் திறந்தவன்... ஒரு கணம் இதயம் துடிக்க மறந்துதான் போனான்.

மனோ சித்ரா!

இளநீல சில்க் காட்டனில் ரோஜாப் போல் பரவசப்படுத்தினாள்.

''வா... வாங்க சித்ரா... வாட் எ ஃப்ளசன்ட் சர்ப்ரைஸ்? என் வீடு எப்படி தெரியும்?''



''வளசரவாக்கம், அப்சரா ஃப்ளாட்ஸ். இது போதாதா? இன்னைக்கு ஆயுத பூஜை... ஆபீஸ் லீவ்! உங்களைப் பார்க்க முடியாது. அதான் இங்கே வந்து விட்டேன். டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?''

''ஐயோ என்னங்க நீங்க?''

''டிபன் உங்களோடதான். என்ன சமையல்?'' என்றபடி டேபிளை பார்த்தவள் விழிகளை மலர்த்தினாள்.

''பிரட், ஆம்லெட்... இதுவா உங்க டிபன்?''

''யா...''

சுற்றிலும் நோட்டம் விட்டாள். அதிகமாய் பொருட்கள் இல்லை. இருந்த சின்னச் சின்ன பொருட்கள், சூட்கேஸ்கள் வெளிநாட்டுத் தயாரிப்பாய் இருந்தன.

'பர்மா பஜாரில் வாங்குவான் போலும். அட இதென்ன? புடவை கவர்? யாருக்கு வாங்கியிருக்கிறான்?'

அதைப் பார்த்ததும் மனசு சூம்பிப் போனது.

அந்நேரம் செல்போன் ரீங்கரிக்க... நம்பரைப் பார்த்து முகம் மாறியவன்... சட்டென கட் பண்ணினான்.

அது... அவளை என்னவோப் பண்ணியது.

இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு உடனே புறப்பட்டுப் போனது... அவனுக்கு வருத்தத்தைத் தந்தாலும்...

தினம் தினம் தாலாட்டி தூங்க வைக்க... அந்த வார்த்தைகளே போதுமானதாய் இருந்தது.

திரும்பத் திரும்ப நெஞ்சில் முட்டி மோதி பரவசப் படுத்தியது.

'ஆபீஸ் லீவ்! உங்களைப் பார்க்க முடியாது. அதான் இங்கே வந்துட்டேன்.'

'அதான் ஏன் சித்ரா? ஒரு நாள் கூட என்னைப் பார்க்காம இருக்க முடியலேன்னா? என்ன காரணம்? காதலா?'

## 12

அதற்கடுத்து வந்த நாட்களில் மனோவால் அவனிடம் சகஜமாய் பேச முடியவில்லை. ஹாய், ஹலோ என்ற சின்ன புன்னகையோடு வேலையில் பிஸியாகிப் போக... சித்தார்த் அவள் வேலை பளுவை புரிந்து கொண்டு ஒத்துழைக்கிறான்.

மனோவுக்கு மனசு ஒரு நிலையாய் இல்லை. குழப்பங்கள் ஏகப்பட்ட முடிச்சுகளைப் போட்டு அவளை இறுக்கின.

வீட்டில் கல்யாணப் பேச்சு. ஆதியின் காதல் அவள் அறிந்ததுதான். ஏன், சித்தார்த்தைப் பார்க்கும் வரை.... அவளுக்கும் அந்த விஷயத்தில் எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆதியை காதலிக்கவில்லையே அன்றி... அவனை ரொம்பவேப் பிடிக்கும். மிகப் பெரிய பணக்காரன், இளம் தொழிலதிபர் என்ற பந்தா கொஞ்சமும் இன்றி, அழகும், கம்பீரமும் அளப்பரிய இருந்தாலும் எந்த கெட்ட பழக்கமும், சகவாசமும், அண்ட விடாமல் ஒழுக்கமாய் இருப்பது... இக்காலத்தில் எவ்வளவு சிரமம்?

ஆனால், சித்தார்த்?

அவனைப் பார்க்கும்போதே... சிறு தூறலாய் மனசு பரவசப் படுகிறதே! அவன் அழகும், இளமையும், திறமையும், இதயத்துக்குள் மணம் வீசுகிறதே... புரட்டிப் போடுகிறதே! ஆனால், ஏதோ ஒரு விஷயம், ரகசியம் அவனுள் இருப்பது போல் உள்ளது. பட்சி படபடக்கிறது. அடிக்கடி போன் வருகிறது. இயல்பான விஷயம் தானே? ஆனால், அனால் ஏன் இயல்பாய் இருக்க முடியவில்லை? பட்டென கட் பண்ணுகிறான். அவன் ஃப்ளாட்டில் புடவைகள்



அடங்கிய கவர்! நான் பார்த்து விட்டேன் என்றுணர்ந்ததும் முகமே வியர்த்துப் போனதே! அப்படியெனில் அந்த புடவைகள் யாருக்கு? அவன் வாழ்க்கையில் இன்னொரு பெண் இருக்கிறாள். பிறகெப்படி அவனை நம்புவது? எந்த அடிப்படையில் அவன் மீதுள்ள அன்பை நான் வீட்டில் சொல்ல முடியும்?

தன் கால்களால் பறவை சிக்கிக் கொள்ளும். தன் நாவால் மனிதன் சிக்கிக் கொள்வான். அந்த முட்டாள் தனத்தை அவசரப்பட்டு செய்து விடக் கூடாது.

பார்ப்போம்... என்னதான் நடக்கிறதென்று!

வீட்டில் பேச்சு வார்த்தை களை கட்டியிருந்தது. வைதேகி ஏற்படுத்தி விட்டிருந்த வெறுமை தற்காலிகமாய் மறைந்து போனது. அடுத்த வாரம் மனோ சித்ராவின் பிறந்த நாள். அதை தடபுடலாய் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

உறவினர்களையும், முக்கிய நண்பர்களையும் அழைப்பது, ஆதித்யா, மனோசித்ராவின் திருமண அறிவிப்பை தெரிவிப்பது என முடிவானது.

ஆதித்யா மகிழ்ச்சியில் கரைந்தான். தன் அன்பை தெரிவிக்க ஸ்பெஷலாய் வைரக்கற்களால் ஐ லவ் யூ என்ற வாசகம் பொறித்த மோதிரம் செய்ய ஆர்டர் கொடுத்தான். தங்க சரிகை பார்டர்ட்ட ஐந்து லட்ச ரூபாயில் பட்டுப்புடவையும் நெய்யச் சொன்னான்.

வீட்டில் பேச்சு வாக்கில் தனஞ்செயன், ''மனோ... உன் பர்த்டேக்கு அந்தப் பையன் சித்தார்த்தையும் இன்வைட் பண்ணிடும்மா!'' என்றார் கேஷுவலாய்.

''சரிங்க மாமா!'' என்றாள் அத்தனை குழப்பத்திலும் சின்ன உற்சாகத்துடன்.

''சித்தார்த்...''

அவன் எதிரே வந்து நின்றாள்.

ஒரு கணம் மூச்சடைக்க அவளைப் பார்த்தவன் நாசி விடைக்க பெருமூச்சு விட்டு, ''வாங்க சித்ரா. உங்களோட பேசி ரொம்ப நாளான மாதிரி பீலிங்.''

''வொர்க் லோடு அதிகம்... அதான்!''

''சின்ன வயசில ரொம்ப பிரஷரை ஏத்திக்காதீங்க.''

''தாங்க்ஸ்... அப்புறம்...''

''ம்...''

''கமிங் ஃப்ரைடே என் பர்த்டே!''

''வாவ்... அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.''

''வீட்ல சின்ன பார்ட்டி இருக்கு! ரிலேட்டிவ்ஸ், ப்ரண்ட்ஸ் தவிர, உங்களை மட்டும்தான் இன்வைட் பண்ணியிருக்கேன்!''

'நான் உனக்கு அவ்வளவு முக்கியமானவனா சித்ரா?'

அவன் பார்வையின் வீச்சைத் தாங்க மாட்டாமல் வேறு பக்கம் விழிகளைக் கடத்தினாள்.

''கண்டிப்பா வந்துடுவேன் சித்ரா!

* * *

பணத்தை வாரியிறைத்திருந்தான் ஆதித்யா. விஸ்தாரமான கார்டனில் ஆங்காங்கே வெள்ளைத் துணி விரிக்கப்பட்ட மேஜைகளும் நாற்காலிகளும் ஆட்களால் நிரம்பியிருக்க... செடி கொடிகள் உட்பட வண்ண பல்புகள் அணிந்திருந்தன. சின்ன மேடை அலங்கரிக்கப் பட்டு... சிண்ட்ரெல்லா தேவதையாய் வடிவமைக்கப்பட்ட அலங்கார உடையில் உதட்டில் புன்னகையோடு வீற்றிருந்தாள் மனோசித்ரா.

வாழ்த்துக்களும், பரிசுப் பொருட்களும் அவளைச் சுற்றி இறைந் திருந்தன.

பலவித உணவுகளும், பானங்களும்... வயிற்றை நிரப்பிக் கொண் டிருக்க...



அவள் கண்கள் மட்டும் ஏனோ, பரிதவிப்புடன் சித்தார்த்தை தேடின.

ஆதித்யா, தன் தந்தையை வீல் சேரில் தள்ளிக் கொண்டு மேடை யருகே வந்தான்.

மைக்கை வாங்கி மென்மையாய் பேசினார் தனஞ்ஜெயன்.

பலரின் கரகோஷத்தின் இடையில் ஆதி, மனோவின் திருமண அறிவிப்பை சொன்னார்.

ஆதித்யா, மனோவின் கரம் பற்றி மோதிரம் அணிவித்து, பட்டுப் புடவை அடங்கிய பரிசையும் அளித்தபோது... அவளால் மறுக்க முடியவில்லை.

அதே நேரம்...

உள்ளே பரிசு பார்சலுடன் நுழைந்து கொண்டிருந்த சித்தார்த்தின் காதுகளில் திருமண அறிவிப்பு விழ... வேர் பிடுங்கப்பட்ட செடி போலானான்.

சித்ராவுக்கென வாங்கி சேமித்த பரிசுப் பொருள் கையில் கனத்தது.

அதைப் பிரித்துப் பார்த்ததுமே தன் அன்பும், அக்கறையும் புரிந்து கொள்வாள்... என்று நம்பியிருந்தான்.

அத்தனையும் சுனாமியால் அடித்துச் செல்லப்பட்டதாய் உணர்ந் தான்.

தன் ஏமாற்றத்தை, இழப்பை, வலியை மறைத்துக் கொண்டு, பரிசுப் பொருளை ஒரு மரத்தின் பின்னால் வைத்துவிட்டு அவளை நோக்கி நடந்தான்.

அழகு மொத்தமும் அவளிடமே குவிந்திருப்பதுப் பால் பிரமையை உண்டாக்கினாள் மனோ சித்ரா.

அவனைச் சற்று தூரத்திலிருந்தே பார்த்து விட்டவள் அவன் வெறுங்கையுடன் வருவது ஏமாற்றத்தை அளித்தது.

'அட்லீஸ்ட் அவன் தரும் பரிசு மூலமாகவாவது தன் மேலுள்ள காதலை புரிந்து கொள்ளலாம் அல்வா? அப்படியானால்... அவனுள் நான் இல்லையா?'

இதயம் விம்மியது.

'என்ன முட்டாள்தனமிது. அது தெரிந்து கொண்டால் மட்டும் என்ன ஆகிவிடப் போகிறது? நடக்கப் போவதை நிறுத்தி விடுவாயா?

'ஒரு சின்ன நப்பாசை! என்னைப் போல் அவனுக்கும் என்னைப் பிடிக்கும் என்ற நிம்மதியாவது போதுமே!'

''வாழ்த்துக்கள் சித்ரா! நீடூழி வாழ வேண்டும். வேலை பளுவில் உங்கள் பர்த்டேயை மறந்து விட்டேவன். பரிசுப் பொருளும் வாங்க நேரமில்லை எனினும், எங்க ஆதித்யா சாரே மிகப் பெரிய பரிசு தானே?'' துயரம் மறந்து பளிச்சென சிரித்தான்.

விக்கித்துப் பார்த்தாள் மனோ.

* * *

ஒரு வாரம் வரை மனோசித்ரா அலுவலகம் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை.

'என் பர்த்டேயைக் கூட மறந்துப் போகிற அளவுக்கு தான் என் நினைப்பிருக்கிறதா சித்தார்த்? அதுவும் கார்ட்டஸிக்குக் கூட ஒரு பொககே தர மனசின்றி... மனதில் எதுவுமே இல்லாமல் தான் இருந் தீர்களா?'

'ஒரு பொய்யாவது சொல் கண்ணே...

உன் காதல் நான்தானென்று.'

டி.வி.யில் பாடல் ஓட... அதே மனநிலையில் தான் இருந்தாள்.

காதல் எந்தளவு கம்பீரம் தந்தாலும், அதைப் பெற எந்தளவும் தாழ்ந்துப் போக தயாராகவே இருக்கும்.



சித்தார்த் அவளை விட அதிகமாய் பாதிக்கப்பட்டான்.

அவன் அவளின் அந்தஸ்து பற்றியோ... வேறு எதைப் பற்றியும் நினைத்துப் பார்க்கவில்லை.

அவளை ரொம்பவே பிடித்திருந்தது. யாருமற்ற தன் உலகில் அவளையே தன் நிலம், நீர், காற்றாய் மனசு நினைத்தது. ஆனால், ஆதித்யாவின் முறைப் பெண் என்பதையோ, அவர்கள் வீட்டில் அவர் களிருவருக்கும் தான் முடிச்சுப் போடுவார்கள் என்றோ யோசிக்கவே இல்லை.

நல்ல வேளை... ஒரு கணம் முன்பே சென்று பரிசளித்திருந்தால்... என்ன ஆகி இருக்கும்? சித்ராவுக்கு எப்பேர்பட்ட தர்ம சங்கடம் ஏற்பட்டிருக்கும்? ஆனால் சித்ரா ஏன் ஆதி பற்றியோ, தங்கள் நிச்சயத்தைப் பற்றியோ என்னிடம் சொல்லவில்லை? என்னிடம் பேசியது, பழகியது எல்லாம் யதார்த்தமாய், வெறும் நட்புடன் தானா? நானாகதான் வேறு மாதிரி கற்பனைப் பண்ணிக் கொண்டேனா? ஐயம் எ ஃபூல்!

வலித்த மனதை ஏதேதோ சொல்லி தேற்றிக் கொண்டவன், தன்னையே கடிந்து கொண்டான்.

'நீ எதற்காக இங்கு வந்தாய்? அதை மறந்து விட்டு, காதல், ஊதல் என்று தாடி வளர்க்கிறாய்? அடுத்த பிளான் என்ன?'

சித்தார்த் தெளிந்தான்.

## 13

சித்ரா அலுவலகத்திற்கு வந்து போகிறாள் என்பதே அவனுக்கு இரண்டு நாட்கள் கழித்தேத் தெரியும்.

'ஏன்? எதற்காகப் பேசவில்லை? என் மனதில்தான் களங்கம், அவளுக்கென்ன?'

அப்போது ஆதித்யா அவனை இன்டர்காமில் அழைத்தான்.

''என் ரூமுக்கு வந்துட்டுப் போ சித்தார்த்!''

''யெஸ்... சர்!''

வந்தான்.

கரண்ட் நியூஸ் பற்றியும், புலனாய்வுப் பற்றிய சில விஷயங்கள் பற்றியும், சர்க்குலேஷன் குறித்த ஐடியா என பேசி முடித்து விட்டு, ''ஏன் வீட்டுப் பக்கமே வர்றதில்லே சித்தார்த்? அப்பா உன்னை ரொம்ப மிஸ் பண்றதா ஃபீல் பண்றார்.''

அதைக் கேட்டதும் அவனுக்கு கண் கலங்கியது.

''நானும் அவரை ரொம்ப மிஸ் பண்றேன் சர். இன்னைக்கே ஆபீஸ் முடிஞ்சதும் போய் பார்க்கிறேன் சர்!''

''மனோ கூட கார்லயே போய்டு சித்தார்த். நான் வேற வேலையா போய்டுவேன். டின்னர் உன் கூடதான். அதுக்குள்ளே வந்துடுவேன்.''

''ப... பரவாயில்லே சர்... நான் பைக்லேயே...''

''நானும் சரி... அப்பாவும் சரி... உன்னை எங்க வீட்டுப் பிள்ளையாதான் நினைக்கிறோம். சங்கடப் படாதே... அவளோடவேப் போய்டு!''

''எப்ப சார் மேரேஜ்?''

''கூடிய சீக்கிரமே! உன்கிட்ட சொல்வதற்கென்ன? அம்மாவைப் பற்றி ஒரு தகவல் கிடைச்சிருக்கு. நார்த் சைட்ல இருக்கிறதா. ரெண்டு நாள்ல கிளம்பறேன். என் கல்யாணத்தப்ப அம்மாவும் சேர்ந்து ஆசீர்வதிக்கணும்னு ஆசைப்படறேன் சித்தார்த்!'' சொல்லும்போதே குரல் கரகரத்தது.

சித்தார்த்திற்கு அவன் கரம் பற்றி ஆறுதல் சொல்ல வேண்டும் போல் ஆவல் ஏற்பட்டது.



''கண்டிப்பா சர்... கண்டிப்பா அம்மா உங்க கல்யாணத்தை நடத்தி வைப்பாங்க...''

''யெஸ்...'' பெருமூச்சு விட்டான்.

அவன் மூடை மாற்ற பேச்சை திசை திருப்பினான்.

''சித்ரா மேடம்.. உங்களுக்கு செம மேட்ச்! இதென்னவோ அரேன்ஞ்டு மேரேஜ் மாதிரி தெரியலே... மேடம் கூட மறைச்சிட்டாங்க... சொல்லாம...''

கண நேரத்தில் ஆதித்யாவின் முகம் வெட்கத்தில் சிவந்து போனது.

''சீச்சீ... மனோவுக்கு ஒண்ணுமே தெரியாது...''

''............?!''

''எனக்கு அவளை ரொம்பப் பிடிக்கும். வீட்டிலேயும் பொதுவா எப்பவும் எங்க கல்யாணத்தைப் பத்தி பேசறதால... எனக்கு அவ, அவளுக்கு நான்னு தெரியும். பட், அவளுக்கும் என் மேல ரொம்ப இஷ்டம். ரெண்டு பேருமே ஐ லவ் யூன்னு சொல்லிக்கலையே யொழிய... ரெண்டு பேர் மனசிலேயும் காதல் இருந்தது.''

''அதானே சர் வேணும்!''

தலையாட்டிச் சிரித்தான் ஆதித்யா.

* * *

காரை மிதமான வேகத்தில் ஓட்டினாள் மனோ சித்ரா. அவள் பக்கம் திரும்பச் சொல்லி கட்டாயப் படுத்திய கண்களை சாலையில் கடந்த மக்கள் மீது போட்டான்.

கையிலும், இடுப்பிலும் கலர் கலரான பிளாஸ்டிக் குடங்களுடன் தண்ணீ லாரி முன் வரிசையாய் நின்ற பெண்களும், இப்போதும் கூட சைக்கிளில் பறந்த மனிதர்களையும் வேறு சந்தர்ப்பமாயிருந்தால் வியந்திருப்பான். இப்போதுள்ள மனநிலையில்... அவள் பக்கத்தில் எதுவும் பேசாமல் அமர்ந்திருப்பதே பெரிய தர்ம சங்கடமாய் இருந்தது.

அதுவே தன் உள்ளத்து ஏமாற்றத்தைப் புரிந்து கொள்ள ஏதுவாய் அமைந்து விட்டால்?

''எனக்கு முன்னாடியே சொல்லியிருக்கலாமே மேடம்?''

''மேடமா? இதென்ன புது மரியாதை? நான் எதை சொல்லாம மறைச்சேன்?'' என்றாள்.

''ஆதிசாருக்கும், உங்களுக்கும் கல்யாணம்ங்கறதை!''

பதில் சொல்லாமல் புன்னகைத்தாள்.

''நீங்க ரெண்டு பேரும் அருமையான ஜோடி தெரியுமா? சாருக்கு நீங்கன்னா அவ்வளவு இஷ்டமாம். சொன்னார்.''

அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அந்த முகத்திலிருந்து எதையும் யூகிக்க முடியவில்லை.

'இயல்பாய் பேசுகிறானா? அல்லது உணர்வுகளை ஒளித்து வைத்து விட்டு நடிக்கிறானா?

எதுவாயிருந்தாலும் இனி ஆகப் போவது என்ன?'

''சர் எப்படியிருக்கார்?''

''அதான் ஆபீஸ்ல பார்த்தீங்களே...''

''நான் பெரியவரைக் கேட்டேன்.''

''பார்க்கப் போறீங்களே... அவர்கிட்டயே கேட்டுக்குங்க!''

''சரிங்க!''

அதன் பிறகு அவர்களிடையே பேச எதுவும் இல்லை என்றார்... மௌனம் பலமாய் ஆட்சி செய்தது.

* * *

ஞாயிறு!

தலை காயாமல் ஈரமாகவே இருந்தது.



கௌதமி ஹீட்டரை எடுத்து தலையை இப்படியும், அப்படியுமாய் காட்டி காய வைத்தாள். தலை முடி ஆங்காங்கே வெளுத்து, அவள் முகத்திற்கும், வயதிற்கும் தனி அழகையும், மரியாதையையும் தந்தது.

சாப்பிடுவதற்கு முன் போடவேண்டிய சுகர் மாத்திரையைப் போட்டுக் கொண்டாள்.

சாப்பிட அரை மணி நேரம் கடக்க வேண்டும். ஜன்னலருகே வந்து நின்றாள்.

மலைப்பிரதேசத்துக்கே உரிய குளிர் கொஞ்சமும் வஞ்சமின்றி அவளைத் தழுவியது.

கம்பளியின் உதவியின்றி அந்தக் குளிரை அனுபவிக்க பழகிக் கொண்டாள்.

வெண்ணிற முகில்கள் தாழ்வாய் தவழ்ந்து கீழிறங்கிக் கொண்டிருந்த அழகைச் சொல்லி மாளாது.

பயிரிடப்பட்டிருந்த கேரட்டையும், முட்டை கோஸையும் போர்த்தியது.

சற்று தொலைவில் நிலச்சரிவோடு சில வீடுகளும் சரிந்து விழுந்து, காணாமல் போயிருந்த அவலத்தை பெருமூச்சுடன் ஜீரணிக்க வேண்டியதாய் இருந்தது.

'மனிதர்களின் பேராசையின் முன் மலை நிலங்கள் மட்டுமென்ன தலை நிமிர்ந்து நின்றிடுமா என்ன?'

இப்போதும் கூட மழை பொழிந்து கொண்டு தானிருந்தது.

மங்கிகுல்லாவும், ஸ்வெட்டரும் அணிந்த மக்கள் குடைகளுக்குள் சோம்பலாய் நடந்துக் கொண்டிருந்தனர்.

அழுக்கு படிந்த சுவற்றுடன் பத்துக்கு பத்து அளவுள்ள கட்டிடத்தினுள் ஹோட்டல் இயங்கிக் கொண்டிருக்க... காலை உணவு வாங்க... வெளியே வரை சிறு கூட்டம் முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.

நல்ல உயரமாய்... அழகாய், நிறமாய், இளைஞன் ஒருவன் புது பைக்கில் பயணித்துக் கொண்டிருக்க...

சட்டென நினைவு வேறெங்கோத் தாவியது.

''ஆதித்யா! இப்போது அவன் இந்த பிள்ளையை மாதிரி தானே உயரமாய் வளர்ந்திருப்பான்? இவனைப் போல் தான் நிறமும்! கண்ணும், மூக்கும் நேர்த்தியாய்... பெரியவனான பின்பும் ரொம்பவே வசீகரமாயிருப்பானே என் மகன்!

'என் மகன்?'

தொண்டைக்குள் கசந்தது.

'அந்தச் சிறு வயதிலேயே என் மீது அந்தளவு பாசம் இல்லாமல் தானே இருந்தான்? என்னை மறந்துமிருப்பான். இருபத்தெட்டு வயதாகி இருக்குமே! கல்யாணமாகி இருக்குமா? இல்லாமல் என்ன?' அந்தாள் இதுநாள் வரைக்கும் பண்ணாமலா விட்டிருப்பார்?

'ஆதி... என்ன படித்திருப்பான்? டாக்டரா, இன்ஜினியரா? இல்லை ஏதோ ஒரு டிகிரியை வைத்துக் கொண்டு, பிஸினஸ் பண்ணியோ, மாத சம்பளம் பெற்றோ வாழ்க்கையை கடத்துகிறானா?

'இன்று எனக்கு என்ன ஆகிவிட்டது? ஏனிந்த யோசனைகள்? வேண்டாம்... வேண்டாம். மற...!''

தருணிடமிருந்து அதன் பிறகு எந்த மெசேஜும் வரவில்லையே!

யாரவன்? என் பர்த்டேயை எப்படி தெரிந்து கொண்டான்?

எல்லாம் தெரியும் என்றானே?

என்னத் தெரியும்? எதெல்லாம் தெரியும்? எப்படித் தெரியும்?

குழப்பத்தில் தலை வெடிப்பது போலிருந்தது.

அதற்கு மேல் தன்னை வேண்டாத நினைவுகளிடம் விட்டு வைக்க விருப்பமில்லை.



கிச்சனிற்குச் சென்று... சூடாய் மூன்று இட்லிகளை தட்டில் வைத்து... புதினா சட்னியை வைத்து ஹாலுக்கு வந்தாள்.

டேபிளின் மேல்.. ஒரு பார்சல் இருந்தது. மகா விஷ்ணு படத்தை லேமினேட் செய்யக் கொடுத்திருந்தாள். அதை பள்ளி விட்டு வரும்போது வாங்கி வந்ததை அப்படியே வைத்து விட்டிருந்தாள்.

சாப்பிட நினைத்ததை விட்டு, அதை எடுத்தாள்.

செய்தித் தாள் சுற்றப்பட்டிருந்ததை லாவகமாய் பிரித்து எடுத்தவள்... சட்டென அந்த செய்தித் தாளில் கண்கள் படிந்தது.

தெரிந்த முகமாய் ஒருவர்!

## 14

சேரில் அமர்ந்திருந்த பெரிய மனிதர், அழகாய் உடை உடுத்தியிருந்த இளம்பெண், அவளுக்கருகில் முகமெல்லாம் சந்தோஷம் பொங்க ஒரு இளைஞன்.

அந்த பெரியவரின் முகம் மிக பரிச்சயமானதாய் தெரிய... கண்ணாடியை கழற்றி, துடைத்துப் போட்டுக் கொண்டு பார்த்தாள்.

ஓரிரு கணங்களில் ஷாக்கடித்தது. முடி நரைத்து, வழுக்கை விழுந்து, நெற்றி பெரிதாகி இருந்ததால் உடனே அடையாளம் காணாமல் இருந்தது.

இது அவர்தான்... அந்தாளே தான்! இங்லீஷ் பேப்பரில் போட்டோ வர்ற அளவுக்கு என்ன?'

ஆர்வம் பேயாட்டம் போட பரபரவென கீழே இருந்த செய்தியில் கண்களை ஓட விட்டவள், படித்துவிட்டு அதிர்ந்தாள்.

'இ... இது... இதுதான் ஆதித்யாவா? நான் பெற்ற பிள்ளை ஆதிக்குட்டியா இது? இந்த பத்திரிகைகளுக்கெல்லாம் நிர்வாக

ஆசிரியர் என் மகனா? அவன் மணமுடிக்கப் போகிற பெண் இவள் தானா? அழகாய் அவனுக்குப் பொருத்தமாய்தானிருக்கிறாள்.

தனஞ்ஜெயன் மீது பார்வை பதிந்தது.

'முகம் பூரா எவ்வளவு சந்தோஷம்? என்னை வாழ்நாள் முழுக்க அழ வைத்துவிட்டு நீ மட்டும் சிரிச்சுக்கிட்டு இருக்கேயில்லே? என் மகன் கல்யாண விஷயத்தைப் பெற்றவள் பத்திரிகையில் பார்த்து தெரிந்து கொள்கிற அளவுக்கு வச்சிட்டே இல்லே?'

அதற்குமேல் அவளால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை. சாப்பிடவும் இல்லை. ஆத்திரமும், கண்ணீரும் பொங்கி வழிந்தன.

* * *

இப்போதெல்லாம் முன்புபோல் சுறுசுறுப்பாய் இயங்க முடிய வில்லை கவுதமியால்!

தன் மகனைப் பற்றி தெரியாத வரையில் கொஞ்சம் நிம்மதியாகத் தான் இருந்தாள். மூன்று வயதில் விட்டுப் பிரிந்த மகனின் நினைவு எழும்போதெல்லாம் வலுக்கட்டாயமாய் தன் எண்ணங்களை மற்றதில் செலுத்துவாள்.

உலகத்தில் தாய்ப்பாசத்தைவிட உருக்குலைக்கும் நோய் வேறு உண்டா? தினமும் தன்னைத்தானே போராடி வாழ்ந்து வந்தாள். கணவனின் நம்பிக்கை துரோகம் என்பது காலத்துக்கும் வைக்கப்பட்ட கொள்ளி! அதுதான் இன்னமும் அவள் மனதை சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்தாளுக்காக, என் பிள்ளையை அவசரப்பட்டு பிரிந்து வந்திருக்க வேண்டாமோ? என்று தினமும் அவளுள் கேள்வி எழுந்து அடங்கும்.

'மூன்று வயதில் அம்மா வேணாம், அப்பாதான் வேணும்னு முடிவு செய்ய முடியுமா? அதற்கான வயதா அது? அதைக்கூட புரிந்து கொள் ளாமல், என் பிள்ளையின் அருகாமையை இழந்து இத்தனை ஆண்டுகளை வீணடித்து இருக்கிறேனே! பணமிருக்கட்டும். ஆள், அம்புகள் இருக்கட்டும். ஆனால், ஒரு குழந்தைக்கு அம்மா எவ்வளவு முக்கியம்?

நான் உயிரோட இருந்தும்... என் மகனுக்கு தாய் அன்பைத் தராமல் துரோகம் செய்து விட்டேனே! தவறு செய்தது அந்தாள்! ஆனால், தண்டனையை அனுபவித்தது. நானும் என் பிள்ளையுமா?'

இந்தக் கவலையிலேயே பத்து வயது கூடுதலாய் வந்து ஒட்டிக் கொண்டது போல் சோர்ந்து போனாள்.

இதுநாள் வரை உறங்கிக் கிடந்த பிள்ளைப் பற்றிய ஏக்கம் எப்போதும் விழித்திருந்து இம்சைப் படுத்தியது. தினம் எழுதும் பழக்கம் உள்ளவள் பேனாவையே மறந்து போனாள்.

* * *

**சனிக்கிழமை!**

பள்ளிக்கு அரைநாள் என்பதால் பிற்பகல் வீட்டில் இருந்தாள்.

இரண்டு நாளில் மலர் கண்காட்சி நடக்க இருப்பதால் கொடைக் கானல் முழுக்க சுற்றுலாப் பயணிகள் நிரம்பியிருந்தனர்.

ஒரு வார இதழைப் புரட்டியவள், கவனம் செலுத்த முடியாமல் மூடி வைத்தாள்.

சாரல் மழை பெய்து கொண்டிருந்தது. பால்கனியில் காயப்போட் டிருந்த உடைகளை எடுத்துக் கொண்டிருந்தபோது செல்போன் அழைத்தது.

துணிகளை சோபாவின் மேல் கிடத்தி... மொபைலை எடுத்தாள்.

புது நம்பர்!

'யாரிது?'

சற்று நேரம் யோசித்துவிட்டு அட்டெண்ட் பண்ணினாள்.

''ஹலோ...''

''ஹலோ... கவுதமி மேடம் இருக்காங்களா?'' புதிய ஆண் குரல்... அழகான ஆங்கிலத்தில் ஒலித்தது.

''யெஸ்!''

''ஹவ் ஆர் யூ மேடம்?''

''முதல்ல நீங்க யாருன்னு சொல்லுங்க?''

''தருண்!''

''வாட்?''

''உங்க பேஸ்புக் நண்பன் தருண் மேடம்!''

''எ... எப்படி என் நம்பர்... உங்களிடம்?'' அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி.

''அதெல்லாம் பெரிய விஷயமில்லை மேடம். இதையெல்லாம் நேர்ல பேசலாமே!''

''நேர்லயா?''

''உங்களை மீட் பண்ணனும் ப்ளீஸ்!''

''நோ... நோ... ஐ கான்ட்! இதிலே எனக்கு விருப்பமில்லே!''

''ப்ளீஸ் மேடம்...''

''சான்ஸே இல்லை... மிஸ்டர் தருண். நான் இப்ப கேரளாவுல இருக்கேன்!''

''நான் இப்ப கொடைக்கானல்ல இருக்கேன் மேடம்!''

''வா...ட்?''

''சொல்லப் போனா... நீங்க குடியிருக்கிற தெருவுக்கு ரெண்டு தெரு தள்ளி இருக்கிற லாட்ஜ்ல தான் தங்கி இருக்கேன்.''

'அடப்பாவி! அட்ரஸை கையில வச்சுக்கிட்டு தான் பேசறானா? வேணாம்னாலும் வந்து நிப்பான். யாரிவன்? என் பர்த்டேயைக் கூட தெரிந்துக் கொண்டு விஷ் பண்ணினானே! இப்போது நானிருக்கும்



ஊரையும் தெரிந்து கொண்டு வந்திருக்கிறான். காரணமில்லாமல் இருக்காது... ஏதோ விஷயமிருக்கிறது.'

''என்ன மேடம்... லைன்ல இருக்கீங்களா?''

''ம்... சொல்லுங்க!''

''உங்க பர்மிஷன் வேணும் மேடம்... ஜஸ்ட் டென் மினிட்ஸ் போதும். கொடைக்கானல் குளிருக்கு கொஞ்சம் டீ சாப்பிட்டா நல்லாருக்கும் பட். அந்த டீக்கூட தராம அனுப்பி வச்சாலும் ஓக்கே! மீட் பண்ண மட்டும் அனுமதிக்கணும்.''

குறும்புத்தனமும் விவேகமும் கலந்தப் பேச்சு.

மறுக்கவும் முடியவில்லை. மறுத்தால் மட்டும் விடவாப் போகிறான்? அதான்... வெகு பக்கத்திலேயே வந்து விட்டானே!

''ம்... சரி!'' என்றாள்.

* * *

அடுத்த அரை மணி நேரத்தில்... வாசலில் காலிங் பெல் அலறியது.

உள்ளுக்குள் பெரும் எதிர்பார்ப்புடன் கதவைத் திறந்தவள் மலைத்துதான் போனாள்.

மிக அழகான இளைஞன்! மிருதுவான புன் சிரிப்புடன்... கைகுவித்து வணக்கம் சொன்னான். காலடியில் கேரிபேக்.

''வணக்கம் மேடம்... நான் தருண்!''

''வெல்கம்...''

உள்ளே வந்தான்.

''டேக் யுவர் சீட்!''

அவளும் அமர, ''தாங்க்ஸ்'' என்றபடி அமர்ந்தான்.

கேரிபேகை அவளிடம் நீட்டினான்.

பழங்கள், பிஸ்கட்கள், ட்ரை ஃப்ரூட்ஸ் அடங்கியது.

''நோ... நோ... யாரிடமும் இதுபோல் வாங்கிக் கொள்ளப் பிடிக்காது.''

''ப்ளீஸ்... என்னை உங்கள் மகன் போல் நினைத்துக் கொள்ளுங்கள்.''

அந்த வார்த்தை அசைக்க.. கை தன்னிச்சையாய் நீண்டது.

''தாங்க்ஸ் மேடம்!''

''காபி ஆர் டீ?''

''எது குடுத்தாலும் ஓக்கே!''

சற்று நேரத்தில், சுக்கும், மிளகும், ஏலமும் கலந்த டீயை தயாரித்து எடுத்து வந்தாள்.

சுவைத்தவன் முகம் அகன்றது.

''ஃபன்டாஸ்டிக் மேடம்!''

''தாங்க்ஸ் தருண்'' என்றவள் அவன் குடித்து முடிக்கும் வரை காத்திருந்தாள்.

''தென்... என் அட்ரஸ், போன் நம்பர்... எப்படி கிடைச்சது?''

''ஸோ... ஈஸி!''

''அதான் எப்படி?''

''ஒரு உண்மையைச் சொல்லட்டுமா மேடம்?''

''.........?!''

''உங்களோட அறிமுகம் ஆகறதுக்கு முன்னாடியே... அட்ரஸ், நம்பர் எல்லாமே எனக்குத் தெரியும்!''

உடம்பு அதிர அதிர்ந்தாள் கவுதமி.



# 15

''எ... எப்படி?''

''உங்க ஆர்ட்டிக்கிள் படிச்சிருக்கேன். உங்களை என்கரேஜ் பண்ணனும்னு ஆசைப்பட்டேன். அதான் பத்திரிகையி கேட்டு வாங்கிட்டேன்.''

''எந்த ரீடர்ஸுக்கும் என் நம்பரைக்கூட தரக்கூடாதுன்னு சொல்லியிருந்தேனே...!''

சின்னதாய் கோபம் எட்டிப் பார்த்தது.

''ரீடர்ஸுக்குத்தானே தரக்கூடாது. பத்திரிகைக்காரன் கேட்டா தருவாங்களே...?!''

''பிரஸ்? நீங்க பிரஸ்ஸா?''

''இல்ல மேடம்! என் ப்ரண்ட் சித்தார்த் பிரஸ் அவன் மூலமாதான் வாங்கினேன்!''

''ஓ...!''

''இப்ப அதிகமா எழுதறதில்லை போலிருக்கே!''

''அதெல்லாம் விடுப்பா! உன்னைப் பார்த்தா இண்டியன் மாதிரி தெரியலியே...!''

''என் கண்ணையும், நிறத்தையும் பார்த்துட்டு எல்லாருக்கும் வர்ற சந்தேகம்தான்! இந்த ஊர் ரொம்ப அழகுதான்! இல்லேங்கலே... ஆனா, இங்கேயே இருக்க போரடிக்கலை உங்களுக்கு?''

''இப்ப என்ன விஷயமாய் என்னைப் பார்க்க வந்திருக்கே தருண்?''

''சும்மா... ஒரு ஃபார்மல்...''

''நோ... நோ! என் அட்ரஸ், போன் நம்பர் வாங்கறது ஈஸிதான்... ஒத்துக்கறேன். ஆனா, என் பர்த்டேயை தெரிஞ்சு வச்சுக்கிறது ஈஸி இல்லே... ஏன்னா... இது நானா சொன்னா தான்!''

நேரடியாக விஷயத்திற்கு வரவும் கொஞ்சம் தடுமாறிப் போனான்.

''சொல்லுப்பா... இந்த தகவலை எந்த பத்திரிகையில குடுத்தாங்க?''

''உண்மையிலேயே இந்த தகவலும் ஒரு பிரஸ் மூலமா தான் வாங்கினேன்!''

சட்டென ஆத்திரத்தில் கத்தி விட்டாள்.

''தருண்! ஷட் அப் யுவர் நான்சென்ஸ் டாக்கிங்! பொய் சொல்ற துக்கும் ஒரு அளவில்லே?''

''ஐ ப்ராமிஸ் மேடம்! என் ப்ரண்ட் மூலமா பிரஸ்ல கிடைச்ச...''

''நோ... திரும்பத் திரும்ப பொய் பேசினா... எனக்குப் பிடிக்காது!''

''தெரியும் மேடம்! பொய் பேசினா மட்டுமில்லே... தப்பு செய்றவங்களையும், நம்பிக்கை துரோகம் பண்றவங்களையும், நீங்க மன்னிக்கவே மாட்டீங்கன்னும் தெரியும்!''

''............?!''

''என் ப்ரண்ட் சித்தார்த் நியூ டெய்லி பேப்பர்ல எடிட்டர் இன்சார்ஜா இருக்கான்!''

''நியூ டெய்லி?!''

''அந்த பேப்பரோட ப்ரொப்பரைட்டர் மிஸ்டர் ஆதித்யா தனஞ் ஜெயன்தான். உங்க பர்த்டேயைச் சொன்னாராம் மேடம்!''

''ஆதி... ஆதித்யா!''

அந்த சீதோஷ்ணத்திலும் குப்பென வியர்க்க... தன்னை மீறி எழுந்து நின்று விட்டாள்.



''எ... என்னச் சொல்றே தருண்?''

கண்கள் அலை பாய்ந்தன. கலங்கத் தயாராயின.

''முதல்ல உக்காருங்க மேடம்!''

அமர்ந்தாள்.

அவனைப் பார்க்கையில் இப்போது ஒரு வித பயம் முளைவிட் டிருந்தது.

''ரொம்ப எமோஷனல் ஆகாதீங்க வைதேகி மேடம்!''

''வைதேகியா?''

திணறிப் போனாள்.

''இவன் யார்? என்னைப் பற்றி எல்லாமே தெரிந்து வைத்திருப் பவனா?''

''ப்ளீஸ்... ரிலாக்ஸ் மேடம்! உங்க ஊர்ல குடுகுடுப்பைக் காரன்னு வருவாங்க இல்லே? நல்லதையும் சொல்லி, கெட்டதையும் சொல்லி பயமுறுத்தி பணம் பறிப்பாங்க. நானும் குடுகுடுப்பைக் காரன்னே நினைச்சுக்குங்க. ஆனா, நல்ல காலம் பொறந்திடுச்சின்னு நல்லதை மட்டுமே சொல்லப் போற நல்லவன்!''

அவன் தோற்றமும், ஆங்கிலப் பேச்சும், புன்னகையும் அவளுக்கு பயத்தைதான் தந்தது.

''நீ யார்... அதை முதல்லச் சொல்லு'' என்னைப் பத்தி... என்னைப் பத்தி என்னத் தெரியும் உனக்கு?''

''எல்லாமே!''

''வாட்?''

''தனஞ்ஜெயன் சார்... உங்களை நினைச்சு தினம் தினம் அழு துட்டிருக்கார் மேடம்!''

இவன் எல்லாம் தெரிந்தவன் தான்!

சந்தேகமே இல்லை... இவன் எல்லாம் தெரிந்தவன் தான்!

''அந்தாளைப் பத்தி இங்கேப் பேசாதே!'' கசப்பு கன்னத்துச் சுளிப்பிலும் பரிணமித்தது.

''பேசாம இருக்க முடியாது மேடம்! நீங்க அவசரப்பட்டுட்டீங்க! இப்பவும் அவசரப்படாதீங்க!''

''............?!''

''லவ் பண்ணினது. கல்யாணம் பண்ணி வாழ்க்கை நடத்தினது என்று அதிகபட்சம் ஆறேழு வருஷம் அவரை உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். ஆனா, நீங்க பிரிஞ்சிருக்கிற இந்த இருபத்தஞ்சு வருஷம் அவரைப் பத்தி என்னத் தெரியும் உங்களுக்கு?''

''............?!''

''உங்களுக்காகவே பத்திரிகை ஆரம்பிச்சு, உங்களை அதிலே தேடினார்! பாசமில்லாமலா? தேடாத இடமில்லே. ஆனா, நீங்க, தேட முடியாத, சாதாரண எடத்திலே வந்து ஒளிஞ்சிட்டிருக்கீங்க. அவரோ, தன் யோசனையிலே கூட உயரத்திலேதான் வச்சிருந்தார். தாயில்லாம குழந்தைய வளர்க்கறது... எவ்வளவு கஷ்டம்? அதிலும் உங்க பிள்ளையை... ஒரு நல்ல மனுஷனா, சிறந்த தொழிலதிபரா உருவாக்கியிருக்கார்னா... அதுவும் ஒரு நல்ல மனுஷனால மட்டும்தானே சாத்தியம்?''

''என்னத் தெரியும் உனக்கு? அவர் போட்றதெல்லாம். வெளி வேஷம்? நம்பிக்கை துரோகி...''

''தப்பு மேடம். ஆத்திரத்திலும், அவசரத்திலும் எடுக்கிற எந்த முடிவும் சிறந்ததாய் இருக்க முடியாது. மனிதன் சூழ்நிலைகளால் உருவாக்கப்படுகிறான். அந்த கணங்களும், நிகழ்வுகளும் குற்றவாளியாய் காட்டலாமே ஒழிய... அவசர முடிவுகள் ஆயுள் கைதிகளாக்கி விடுகிறது. சில மணித்துளிகள் நாம் அமைதியாய் இருந்து பார்த்தோமானால், இருள் விலகி எல்லாமே பளிச்சென புலப்பட்டிருக்கும்.''



''நிறுத்து! ஏதோ உனக்குத் தெரிந்த ஒரு பக்கத்தை வைத்துக் கொண்டு எனக்கு புத்திமதிச் சொல்லாதே!''

சிரித்தான்.

''யூ ஆர் ராங்! உங்களுக்கேத் தெரியாத, ஏன் தனஞ்ஜெயன் சாருக்கேத் தெரியாத உண்மை எனக்குத் தெரியும்!''

''எ... என்ன?''

''ம்... மெட்டில்டா...!''

''மெ... மெட்டில்டா!'' வெகு காலத்திற்குப் பின் காதில் விழுந்த அந்தப் பெயரால் ஜெர்க் ஆனாள்.

''அ... அவளைப் பற்றி... உ... உனக்கென்னத் தெரியும்?''

''பொறுமையாய் கேளுங்கள் மேடம்...'' என்று நடந்தவைகள் அனைத்தையும் விளக்கினான்.

விந்தணு என்ற விஷயம் அவளுக்கு லேசு பாசாய் தெரியும். ஆனால், அதை வைத்து அவள் வாழ்க்கை மொத்தத்தையும் தன் சதி வலைக்குள் சுருட்டிக் கொண்ட மெட்டில்டாவின் சூழ்ச்சிப் புரிந்தது.

'அப்படியானால் அவர் எனக்கு துரோகம் செய்யவில்லையா? சின்ன சபலபுத்திக்காக நான் பெரிய தண்டனை கொடுத்து விட்டேனா?'

நினைத்து நினைத்து குமுறி அழுதாள்.

சற்று நேரம் அவளை அழவிட்டான்.

பிறகு மெல்லத் தேற்றினான்.

''பி... ரிலாக்ஸ் மேடம். இப்பவாவது உண்மையை புரிந்து கொண்டீர்களே!'

''இது புரிய இருபத்தஞ்சு வருஷம் தேவைப்பட்டதே... அநியாயமில்லையா?''

"...........?!"

திடீரென நினைத்துக் கொண்டவளாய் அவனை உற்றுப் பார்த்தாள்.

"இப்ப மெட்டில்டா எங்கேயிருக்கா?"

"கேன்ஸர்ல இறந்துட்டாங்க. பதினஞ்சு வருஷத்துக்கு முன்னாடி..."

"குழந்தை!"

"அ... அது... இறந்தேப் பிறந்தது!"

"அப்ப... அவர் சொன்னபடி அபார்ஷன் பண்ணிக்கலே!"

"இ... இல்லே!"

"சரி... இதெல்லாம் தெரிஞ்சு வச்சிருக்கியே... நீ யார்?"

".....?"

"சொல்லுப்பா... புருஷன், பொண்டாட்டி எங்களுக்கேத் தெரியாத எல்லா விஷயமும் உனக்கு மட்டும் எப்படித் தெரியும்?" சந்தேகத்துடன் பார்த்தாள்.

தயக்கத்துடன் ஏறிட்டான்.

"நா... நான் மெட்டில்டாவின் உறவினன். அண்ணன் மகன் உறவு! மெட்டில்டா இறந்தப்ப... அவங்க டைரி கிடைச்சது. அதை சமீபத்துலதான் படிச்சேன். அதுல எல்லாமே எழுதப்பட்டிருந்துச்சு. உண்மைய தெரியப்படுத்தி உங்களை சேர்த்து வைக்கவே வந்தேன். டிடெக்டிவ் ஏஜென்சி மூலம் உங்களை எல்லாம் தெரிஞ்சுக்கிட்டேன். என் ப்ரண்ட் சித்தார்த்தை நியூ டெல்லில வேலைக்கு சேர வச்சு அங்கே உள்ளவங்களை பத்தித் தெரிஞ்சுகிட்டேன்."

"உன் பேரு தருண்னு சொன்னே?"

"பொய்! என் பேர் பெஞ்சமின் ஃப்ராங்ளின்!"



# 16

"நான் கிளம்பட்டுமா மாமா!"

ஆதியின் முன் வந்து நின்றாள் மனோ சித்ரா.

அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

மெல்லிய கோல்ட் கலரில் பார்டரிட்ட, கருநீல மைசூர் பட்டில் ரோஜாவை ஒளித்து வைத்தது போல் கொள்ளை அழகைக் கொட்டினாள்.

இப்போதெல்லாம் அதிகமய் சேலைதான் உடுத்துகிறாள்.

பிளவுஸுக்கும், சேலைக்கும் இடைப்பட்ட கொடியிடையின் நிறமும், கழுத்தில் மெலிதாய் அணிந்திருந்த பிளாட்டின செயினும் ஒன்றுபோல் இருந்தது. காதில் மிகச் சின்னதாய் பிளாட்டின கம்மல்!

"என்ன மாமா கிளம்பட்டுமா?"

"ரொம்ப அழகாயிருக்கேத் தெரியுமா?" அவன் கண்கள் அவளுள் சென்று கிச்சு கிச்சு மூட்டியது.

ரசித்தவள் சிரித்தாள்.

"நான் கேட்டதுக்கு இன்னும் பதிலே வரலே...!"

"என்ன அவசரம் இப்ப? வழக்கமா கிளம்பறதை விட ட்வென்ட்டி மினிட்ஸ் முன்னாடியேக் கிளம்பறே? கொஞ்சம் வெய்ட் பண்ணு... நானும் வந்துடறேன்!"

"சிறுகதை போட்டிக்காக... ஜாய் ஆலுக்காஸ் கம்பெனியில டென் லாக்ஸ் ஸ்பான்சர் கேட்டிருந்தோமே... அது விஷயமா அந்த எம்டி கூட ஒரு மீட்டிங் இருக்கு!"

"பார்த்தும்மா... கல்யாணப் பொண்ணு கடுமையா உழைச்சா... உன் மாமனார் என்னை கோவிச்சுக்கப் போறார்..."

வெட்கத்துடன் சிரிப்பைச் சிதறவிட்டு நகர்ந்தவளை... கண் கொள்ளாமல் பார்த்து ரசித்தான்.

வெளியே...

யசோதா... எல்லோரையும் வேலை வாங்கிக் கொண்டிருந்தாள்.

''வேலாயுதம்...''

''அம்மா...''

''நான் நேத்தேச் சொல்லியிருந்தேனே... தாழ இறங்குற மரக்கிளைகளை வெட்டிடுன்னு...''

''நேத்து செவ்வாய்க்கிழமைன்னு வெட்டலேம்மா... இப்ப வெட்டிடறேன்!''

கேட்டிற்கு வெளியே கால் டாக்ஸி வந்து நிற்க... அதிலிருந்து இறங்கினாள் வைதேகி.

கூர்க்கா தடுத்தான்.

''யார் வேணும்?''

''தனஞ்ஜெயனைப் பார்க்கணும்!''

''அவர் யாரையும் பார்க்கறதில்லையே...!''

''நான் பார்க்கணும்னு போய் சொல்லு!''

''நான் பார்க்கணும்னா... யாரு நீங்க?''

''வைதேகி வந்திருக்காங்கன்னு சொல்லு!''

''வைதேகின்னா அவருக்குத் தெரியுமா?''

கேட் வாசலில் கூர்க்கா யாரிடமோ வாக்குவாதம் நடத்திக் கொண்டிருக்க... அருகில் வந்த யசோதாவின் காதில் அந்தப் பெயர் விழுந்தது.



அவசரமாய் அவனை விலக்கி கேட்டைத் திறந்தவள் நின்றிருந்தவளை சில கணங்கள் உற்றுப் பார்த்து... ''அ...ண்...ணி!'' என்று கூவி விட்டாள்.

அவள் உடல் முழுக்க... சந்தோஷத்தில் நடுங்கிற்று. குப்பென்று பொங்கிய பரவசத்தில் கண்களில் தண்ணீர் களை கட்டியது.

''அண்ணி... அண்ணி... இத்தனை வருஷமா எங்கே இருந்தீங்க? எப்படியிருக்கீங்க, எப்படி, எப்படி?'' என்ன பேசுவதென்றேத் தோணாமல் கதறி விட்டாள் யசோதா.

வைதேகிக்கும் வார்த்தைகள் கிடைக்கவில்லை. அவள் கண்ணும் நனைந்திருந்தன.

அப்போதுதான் அலுவலகம் செல்ல மனோ சித்ராவும் வெளியில் வந்தாள்.

அடுத்த ஓரிரு நிமிடங்களில் அந்த மாளிகையில் ஆனந்த அழுகை எதிரொலித்தது.

தன் முன் நின்றிருப்பது... காலம் காலமாய் காக்க வைத்த... தன் மனைவி வைதேகிதானா?' என்ற மலைப்புடன் நெஞ்சை அழுத்திய கனத்துடன் பார்த்தார் தனஞ்ஜெயன்.

இதுநாள் வரை அனுபவித்த அதிர்ச்சியை விட தன் கணவர் வீல் சேரில் அமர்ந்திருக்கும் அதிர்ச்சிதான் வலியைத் தந்தது.

''என்னாச்சு... இதென்ன அநியாயம்? ஏன் இப்படி வீல் சேல... அவன் இதைப்பத்திச் சொல்லவே இல்லையே!''

பதற்றமும், உள்ளத் துடிப்புமாய் தாங்கிக் கொள்ள மாட்டாமல் கணவர் முன் மண்டியிட்டாள்.

ஆதித்யாவும் அன்னையைக் கண்ட பரவசத்தில் நாசி விடைக்க நின்றிருந்தான்.

''யாரு... என்னச் சொன்னாங்க?''

''அதைப் பத்தி, அவனைப் பத்தி அப்புறமாச் சொல்றேன். முதல்ல உங்களுக்கு என்ன ஆச்சு அதைச் சொல்லுங்க!''

''அப்பாவுக்கு உங்களைப் பத்திய கவலையிலதாம்மா. ஸ்ட்ரோக் வந்துடுச்சு. பத்து வருஷமா வீல் சேர்லதான் அவரோட வாழ்க்கையே!''

''ஐயோ... கடவுளே!'' தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

அவள் கரங்களைப் பற்றி தடுத்தார் தனஞ்ஜெயன்.

''என்னை விடு! நீ எங்கேயிருந்தே?''

அவளும் கண்ணீருக்கிடையில் எல்லாவற்றையும் சொன்னாள், அவரும் சொன்னார்.

''தாம்பத்யத்தோட அடிப்படை அன்பாயிருக்கலாம். ஆனா கட்டப் படற தாலியோட வலிமையில நம்பிக்கையும் இருக்கணும். அப்படிப் பட்ட வாழ்க்கையிலதான் சொர்க்கமிருக்கும்னு லேட்டாதான் புரிஞ்சுக் கிட்டேன். ஒரு சின்னப் பையன் வாழ்க்கைன்னா. என்னங்கறதைப் புரிய வச்சிட்டான்.''

''ஆமாம். யாரந்தப் பையன்?''

''பெஞ்சமின் ஃப்ராங்ளினாம். அந்த மெட்டில்டாவோட ரிலேஷன்'' என்றபடி அவனைப் பற்றிச் சொன்னாள்.

''அப்படின்னா... அவனோட ப்ரண்டுதான் சித்தார்த்தா? ஆதி... சித்தார்த்துக்கு போனை போட்டு உடனே வரச் சொல்! அந்தப் புள்ள வந்த நேரம் எல்லாமே நல்லதா நடந்திருக்கு!''

ஆதி உடனே போன் பண்ண.. ஸ்விட்ச் ஆஃப்!

'ஆபீஸுக்கு இந்நேரம் வந்திருக்கணுமே!'

ஆபீஸிற்கு போன் பண்ணினான்.

அதிர்ச்சியான தகவல்தான் கிடைத்தது.

''சித்தார்த் சார்... வேலைய ரிஸைன் பண்ணிட்டாராம். உங்களுக்கு இன்ஃபர்மேஷனை மெயில்ல அனுப்பி வச்சிட்டாராம்.''



''வாட்? ஏன் இப்படி திடீர்னு?''

''தன்னோட சொந்தக்காரணங்களுக்காக அப்படின்னு சொன்னார். இனி இந்த நம்பர்ல கிடைக்க மாட்டேன். போன் பண்ணாதீங்க... ஆதி சார் கிட்டே இதைச் சொல்ற தைரியம் எனக்கில்லே... அவர்கிட்ட மன்னிப்பு கேட்டதா சொல்லிடுங்க. அவருக்கு எப்பவும் நான் உண்மையாதான் இருந்திருக்கேன்றதையும் சொல்லிடுங்கன்னு சொன்னார்!''

''மை காட்... ஏன் இப்படி பண்ணிட்டுப் போனான்?''

செல்போனை கட் பண்ணிவிட்டு ஆதங்கத்துடன் பேசினான்.

''என்னாச்சு ஆதி?''

சொன்னான்.

தனஞ்ஜெயனின் முகமே மாறி விட்டது.

''ஏம்பா? பாசமா பழகினானே? திறமையான பையன். எந்தக் காரணமாயிருந்தா என்ன? முன்னாடியே சொல்லிட்டுப் போயிருக் கலாமே!''

''இதுல இவ்ளோ யோசிக்க என்னயிருக்கு? அந்தப் பெஞ்சமின் அனுப்பியவன். வேலை முடிஞ்சது... போய்ட்டான்'' என்றாள் வைதேகி.

''அண்ணி முதல்ல டீ சாப்பிடுங்க!'' யசோதா கனிவுடன் அவளிடம் நீட்டினாள்.

ஒரு ஓரமாய் ஒதுங்கி நின்றிருந்த மனோ சித்ராவுக்கு உள்ளம் முழுக்க புகை போல் வேதனை அப்பிக் கிடந்தது.

'சித்தார்த்... நீ வேவு பார்க்க வந்தவனா? ஏதோ ஒரு ரகசியத்தை புதைத்து வைத்துக் கொண்டுதான் எங்களைச் சுற்றிச் சுற்றி வந்தாயா?

நீ நல்லவனா, கெட்டவனா? ஒரு வார்த்தைக் கூட சொல்லாமல் போய் விட்டாய்?'

சட்டென அவள் தோள் மீது ஒரு கை வந்து விழுந்தது.

திடுக்கிட்டுப் பார்த்தாள்.

ஆதித்யா... அவளையே குறுகுறுவெனப் பார்த்தபடி.

அந்தக் கைமேல் தன் கரத்தை வைத்து அழுத்தினாள் மனோ.

''என்ன... மாமியார் தேடி வந்துட்ட சந்தோஷமா?''

''இருக்காதா பின்னே?''

மெல்ல நகைத்தாள்.

எங்கிருந்தோ வந்த தென்றல் அவர்களை உரச... அவளுள் இருந்த வேதனையை அள்ளிக் கொண்டு போயிற்று.

நாசூக்காய் யசோதாவும் வெளியில் வந்து விட்டாள். வைதேகி கணவரின் மடியில்... தரையில் அமர்ந்தபடி தலை கவிழ்ந்து கண்ணீர் விட்டாள். அவரோ, இதமாய் அவள் தலையைக் கோதி விட்டார்.

சின்ன சபலம்தான்! ஆனால், அதற்குரிய தண்டனை பெரிது! வாழ வேண்டிய இளமை எல்லாம் காற்றில் கரைந்து போய் விட்டது. இந்த முதுமையிலாவது சொர்க்கத்தை அனுவிக்கட்டும்.

அந்த வீட்டில் இழந்தவை எல்லாம் மீண்டும் வந்து சேர்ந்தது.

## 17

அந்த கால்டாக்ஸி ரயில்வே ஸ்டேஷன் நோக்கிச் சென்றது. காரின் வேகத்திற்கு... அதிவேகமாய் கடந்து செல்லும் மனிதர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வந்தாலும், சித்தார்த்தின் நினைவெல்லாம் தனஞ்ஜெயன் குடும்பத்தையே சுற்றிச் சுற்றி வந்தது.



'எப்படியோ பிரிந்த குடும்பத்தைச் சேர்த்து வைத்தாயிற்று. நான் பிறந்த களங்கத்திற்கு பரிகாரம் செய்துவிட்டேன். அது போதும்! இனி, எப்போதும் அவர்கள் கண்ணில் படமாட்டேன்!'

இப்போதும் கூட அவன் எங்குச் செல்வது என்று முடிவு செய்ய வில்லை. வட மாநிலத்திற்குச் செல்லும் ரயிலில் எந்த ஊருக்கு டிக்கெட் கிடைக்கிறதோ... அந்த ஊருக்குப் போவது என்பது முடிவு. அவன் வாயுள்ள நல்ல பிள்ளை! எங்கும் பிழைத்துக் கொள்வான்.

செல்போன் அலறலில் கலைந்தவன், அதில் ஒளிர்ந்த பெயரைப் பார்த்ததும்... கடுகடுப்பானான்.

அவன் அட்டெண்ட் பண்ணி பேசுவதற்குள், ''மகனே... போனை வைத்து விடாதே!'' என்று தயவாய் கேட்டது பெண் குரல்.

''என்ன?''

''அம்மாவுக்கு ரொம்ப முடியல சித்தார்த். நீ உடனே கிளம்பி அமெரிக்காவுக்கு வா!''

''இதோ பார்... எப்ப உன்னைப் பத்தி தெரிஞ்சதோ அப்பவே உன்னை விட்டுப் பிரிஞ்சிட்டேன். நீ செஞ்ச அநியாயங்களுக்கு தான் கடவுள் தண்டனை கொடுத்திருக்கான். உனக்குத் தேவை பணம்! அது யார் வாழ்க்கையை அழிச்சி கிடைச்சா என்ன? சூழ்ச்சிகளும், கேடான எண்ணங்களையும் கொண்ட பெண்களை நான் மதிப்பதில்லை. அது பெற்ற தாயாக இருந்தாலும் கூட! நீ செய்த தவறுகளுக்கு நான் பிராயச்சித்தம் தேடிக் கொண்டேன். ஆனால், உன்னால் அந்தக் குடும்பத்திற்குக் கிடைத்த தண்டனை அதிகம். அதனால் தான் பிரைன் ட்யூமரும், கேன்சரும் சேர்ந்து வந்து உன்னை படுக்கையில் தள்ளி விட்டது. என்னைப் பொறுத்தவரை நீயொரு சாத்தான்!''

''நீ என்ன வேணாலும் திட்டி விட்டுப் போ! அவரைப் பார்த்தியா? நீ இப்ப எந்த நாட்ல இருக்கே? அவர் நல்லாயிருக்காரா?''

''ஏன்... மறுபடி கெடுக்கறதுக்கா? என்கிட்டேர்ந்து ஒரு தகவலும் கிடைக்காது.''

''என்னை ஏன் சித்தார்த் எதிரியாவே பார்க்கிறே? எனக்கு உறவுன்னு சொல்லிக்க உன்னை விட்டா யாருமே இல்லே! இன்னும் எத்தனை நாள் உயிரோட இருப்பேனோ? கவுண்டிங் மை டேஸ்! உன்னை கடைசியா ஒரு முறை பார்க்கணும்... வா... மகனே!''

''மகனா? என்னைப் பொறுத்தவரை நீ வாடகைத் தாய்! அவ்வளவுதான். அதற்காகத்தான் பலகோடி வாங்கிக்கிட்டியே! நீ இவ்வளவு நாள் உயிரோட இருந்ததே தப்பு. நீ சாகற தகவல் கூட இனி எனக்குக் கிடைக்கக் கூடாது. இதோ... இதுதான் நீ என்கிட்ட பேசற கடைசி பேச்சு. இந்த போன் நம்பர்... இனி செயல்படாது... குட்பை!'' என்றான் மிக சினத்துடன்.

''சித்தார்த்... சித்தார்த்.... வச்சிடாதே!'' என்று மெட்டில்டா ஈனஸ் வரத்தில் அழுதபடி கெஞ்ச...

போனை கட் பண்ணினான்.

செல்போனை பிரித்து உள்ளிருந்த கார்டை எடுத்து நசுக்கி வெளியில் வீசினான்.

மனசுக்குள் மகா அமைதி!

வலது பக்கம் அமர்ந்திருந்த கேரி பேக் அவனை உரசியது... உறுத்தியது.

ரோட்டோர பிளாட்பாரங்களில், சின்னதாய், அட்டை தட்டிகளை வைத்து, மறைத்து, அங்கேயே சமைத்து, உறங்கி, கூடி குடும்பம் பெருக்கி வாழ்ந்துக் கொண்டிருந்த மனதர்களைப் பார்த்து வியந்தான்.



காரை ஓரமாக நிறுத்தச் சொன்னான்.

இறங்கிச் சென்று... தாயும், மகளுமாய் விறகடுப்பில் சமைத்துக் கொண்டிருந்தவர்களின் அருகில் சென்றான்.

இருவரும் அவனை அதிசயித்துப் பார்க்க... பதினேழு வயது பெண்ணான அவளிடம் பார்சலை நீட்டினான்.

''யாரு நீங்க... என்னாது இது?''

''உன் திருமணத்திற்கான என் பரிசு சகோதரி!''

''அவனின் ஆங்கிலம் புரியாமல் மிரள...

''யாருப்பா நீ... பொம்பளைப் புள்ளை கிட்ட என்னா வம்பு பண்றே?''

அம்மாக்காரி எழுந்து வர...

அவன் கவரைப் பிரித்து பட்டுப் புடவையை காண்பித்தான்.

அவன் சொல்வது எதுவும் அவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் விலையுயர்ந்த பட்டுப் புடவை பார்த்ததும் கண்கள் விரிந்தன.

திரும்பி நடந்தவனை கைதட்டி அழைத்தாள் பெரியவள்.

பார்த்தான்.

''இதெல்லாம் எதுக்குத் தர்றேன்னு விளங்கலே? உன் பேரு இன்னாபா?''

''வாட்?''

''நேமு... நேமு!''

''சித்தார்த் தனஞ்ஜெயன்!''

''டாங்க்ஸ் சித்தார்த்து தனஞ்ஜெயன்!''

ஒருவித பரவசத்துடன் காரில் ஏறினான்.

''ஸாரி சித்ரா! உனக்காக ஆசையாய் வாங்கியது! அதை பார்க்கும் போதெல்லாம் உன் ஞாபகம் வந்து அலைகழிக்கும். அது என் அண்ண னுக்கு செய்யிற துரோகம்... அதனால் தான் அந்தப் பெண்ணிற்கு கொடுத்து விட்டேன்!''

எண்ணியவனுக்கு நெஞ்சம் கனத்தது.

தன்னை அழித்து நம்மைக் காப்பாற்றுகிறது இயற்கை. தியாகம்தான் வாழ்க்கை! இது இயற்கை கற்றுத் தந்த பாடம்!


# நந்தினி ஸ்பெஷல்

மாத நாவல்

வெளியிடுபவர் - ஆசிரியர்:

**எம்.எஸ்.சித்ரா**

**அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்**

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர், நந்தனம்,
சென்னை - 35. செல்: 98405 14529